# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] குரோதிஆண்டு புரட்டாசித்திங்கள் 10—10—64 [ இத

திருத்தருமையாதீனம்
ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில
சதசண்டியக்ஞம் யாகசாலை

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

தத்துவங்கள் எண்ணித்
தலையடித்துக் கொள்ளாதே
தத்துவங்கள் ஏதென்னின்
சாற்றக்கேள் — மெத்துஞ்
சுகாரம்ப மாஞ்சிவத்தில்
தோயாத மாயா
விகாரங்கள் தத்துவமா
மே. (22)

ஆசிரியர்:-

வித்துவான்,
சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர்:-

வித்துவான்,
சொ. சிங்காரவேலன், M. A.,

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 || 10-10-64 || இதழ் 11

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | அன்னை அருள் | ... 615 |
| 2 | வணக்கம் | ... 619 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை | . 620 |
| 4 | தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் | ... 631 |
| 5 | பொறுமையின் சிகரம் - தருமரே! | ... 635 |
| 6 | சஹஸ்ராகமம் | ... 639 |
| 7 | சித்தாந்த வினாவிடை | .... 643 |
| 8 | தமிழ் கூறு நல்லுலகம் | ... 651 |
| 9 | தோத்திரப் பாமாலை | ... 655 |
| 10 | திருக்குவளை கல்வெட்டுகள் | ... 657 |
| 11 | மௌனகுரு வணக்கம் | ... 661 |
| 12 | செய்திகள் | ... 663 |
| 13 | எதிர்காலம் | ... 668 |

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] சோபகிருது - புரட்டாசி - 10—10—64 [ இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## அன்னை அருள்

தாய் அன்புக்கு இணையே கிடையாது; அந்த அன்பு செல்வக் குழந்தைகளின் வாழ்வொன்றையே அடிப்படை யாகக் கொண்டது; அதில் தன்னலம் இல்லை; பிற எங்நல மும் அதிலே கலத்தல் இல்லை; குழந்தைகள். குழந்தைகள், குழந்தைகள் என்ற ஒரே நினைவுதான் அதில் இருக்கும். அந்தத் தாயின் வடிவாய், அன்பின் பிழம்பாய், அண்ட சரா சரங்களின் அன்னையாய் உள்ள பராசக்தியின் பரங்கருணை யும் அப்படியே. அன்னையின் அருளால், அருளம்மையின் திருவுள்ளத்தால் அவள் அருள் நிழலில் உலகு நின்று நிலைத்துள்ளது; உலக இயக்கம் ஒழுங்காக நடைபெறுகிறது.

அந்தப் பெருஞ்சக்தியை இந்தியப் பெருநாடு வழிபடத் தொடங்கிய காலம் இன்னது என வரம்புகட்டுமாறு இல்லை; பழமைக்குப் பழமையாய், வரலாறு கடந்த வாய்மையாய்' ஆராய்ச்சியுலகின் அப்பாலுக்கப்பாலாய் விளங்குகிறது அம்மை வழிபாடு - பராசக்தி வழிபாடு.

ஆண்டு தோறும் புரட்டாசித் திங்களில் ஒன்பது நாட்களில் - நவராத்திரி என்ற திருநாட்களில் - முப்பெருஞ் சக்தியாய் விளங்கும் அப்பெருமாட்டியை அகமுருகி வழிபடுவது அன்புலகின் வழக்கு. இலக்குமி, கலைமகள், கொற்றவை என்ற மூன்று கூருய் நின்று இந்நாட்களில் அன்னை அருள் பெருக்குகின்ருள். தன்னை வழிபடும் அன்பர்களுக்கு ஞானத்தை வழங்குவதில் சகலகலாவல்லியாய் விளங்கும் தாய், செல்வத்தை வழங்குவதில் செய்யவளாகவும் திகழ்கின்ருள்; ஆற்றலை வழங்கித் தீயசக்திகளை ஒடுக்கி நல்லறம் காக்கும்போது கொற்றவையாகவும் கோயில் கொள்கிருள்.

சக்தியை மறந்தால் வாழ்வில்லை; மூச்சும் பேச்சும் அவளால்; எண்ணமும் எழுத்தும் அவளால்; வாழ்வும் வளமும் அவளால்; சீரும் சிறப்பும் அவளால்; நோக்கும் போக்கும் அவளால்; ஏற்றமும் தோற்றமும் அவளால்; ஆக்கமும் ஊக்கமும் அவளால்; எல்லாம் "அவள் தரவந்த ஆக்கம்" என்பர் ஆன்ருேர். அவள் சிவனை யன்றி வேறு பிரிந்து நிற்பதில்லை; அவனும் அவளே; அவளும் அவனே என்பது நம் சமய மரபு. அன்பு சிவமாக, அன்போடு பிரியாத அருள் சக்தியாக நிற்பது கண்டு பணிந்து பாடுவது தமிழ் மரபு. அந்த அன்னையின் அன்பு கலந்த அணைப்பிலே, உலகம் துவண்டு கிடக்கிறது. எல்லையற்ற அந்தப் பெருங் கருணையின் பிழம்பே விரிந்த கடலும், உயர்ந்த மலையும், பரந்த கானகமும், குளிர்ந்த சோலையும், செழித்த வையகமும், வெயிலும் நிலவும் ஆகிய எல்லாம். உயிர்களுக்குச் சிவஞானபோதத்தை உண்டாக்கிச் சிவஞானசித்தியைப் பெருக்கிச் சிவம் பிரகாசிக்கச் செய்யும் ஞானசாரிய நிலையில் உள்ளாள் சகல கலாவல்லியாகிய பராசக்தி, அந்த அன்பின்

பிழம்பை அபிராமிபட்டர், காளிதாசர், சங்கரர் முதலிய பக்தர்கள் வழிபட்டு உய்ந்தார்கள்; அந்த இன்ப நெறியை உலகு உய்ய எடுத்துரைத்தும் சென்றார்கள்.

'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்' ஆதலின் சிவவழிபாட்டோடு சேர்ந்துள்ள இவ்வழிபாட்டை அன்புலகு மேற்கொண்டு அரும்பயன் பெற்றதில் தென்னாடு திலகமெனத் திகழ்கின்றது. ஆத்தாள்; அபிராமவல்லி; அண்டம் எல்லாம் பூத்தாள். புவியடங்கக் காத்தாள்; முக்கண்ணி, அவளைத் தொழுவார்க்குத் தீங்கு இல்லை என்பது அபிராமிபட்டரின் அருள்வாக்கு. காஷ்மீரத்தில் அம்பாள் ஆகி நிற்கிறாள்; கூர்ஜரத்திலே கல்யாணியாகி அருள் வழங்குகிறாள்; வங்காளத்தில் காளியாகிக் கருணை வழங்குகிறாள்; மைசூரிலே சாமுண்டியாகி அருள் பெருக்கு கின்றாள்; மலைநாட்டிலே பகவதியாகித் திருவருள் பாலிக்கின்றாள்; தமிழ் நாட்டில் தலங்கள் தோறும் தண்முகம் காட்டித் தண்ணருள் வழங்குகின்றாள் தாய். வடகோடியில் இமயத்தில் கயிலாச பதியுடன் காட்சி தந்து - எல்லைகாக்கும் எங்கள் அன்னை, தென்கோடியில் கன்னித்தாயாய், குமரித் தெய்வமாய் நின்று நாட்டைக் காக்கின்றாள். அன்னையின் அருளை ஒரு கணமும் மறவாது நின்று இருமைப்பயன்களும் எய்துவது உயிர்களின் கடமை.

"உமையலா துருவமில்லை உலகலா துடைய தில்லை
நமையெலா முடையராவர் நன்மையே தீமையில்லை
கமையெலாம் உடையராகிக் கழலடிபரவும் தொண்டர்க்கு
அமைவிலா அருள்கொடுப்பார் ஐயன் ஐயாறனார்க்கே"

என்று இனிக்கப் பாடுவர் தாண்டகவேந்தர். தொண்டர்கள் அருள்பெற வேண்டுமாயின் உமையம்மையின் வழியே பெறுதல் வேண்டும் என்பது அடிகள் திருவுள்ளம் ஆதலை இத் திருப்பாடல் விளக்கும்.

தருமையாதீனத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலட்சுமி துர்க்காதேவிக்கு இந்நவராத்திரி நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடந்து

வருகின்றன. சதசண்டி யக்ஞம், நான்காவது கோடி அர்ச்சனை ஆகிய அனைத்தும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் தக்கோரால் சிறப்புற நிகழ்ந்து வருகின்றன. சிவத்தையும், சக்தியையும் சிந்தையிற் கொண்டு வழிபடும் செந்நெறியாம் சித்தாந்த சைவத் திருநெறியை விளக்கும் இத்திருநாட்களில், கலைமகள் விழாவும் ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் நிகழ்தல் அனைவரும் அறிந்ததே. தருமையாதீன மடாலயம் இந் நவராத்திரியில் கலை மணமும் கடவுள் மணமும் கமழக் கமழத் திகழும். எல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது திருவுள்ளப்பாங்கு. 'கல்வி ஞானக் கலைப்பொருளாக உள்ள' சிவபிரான் திருவடிக்கே பதித்த நெஞ்சுடைய அவர்கள் எதை நிகழ்த்தினாலும் அதில் திருவருள் வலம் காண்பவர்கள். வாழ்க அம்மையருள்! வளர்க பக்திநெறி!

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

1964 வருஷம் ஜுன் மாதம் 6-ந் தேதி எனது சஷ்டி அப்த பூர்த்தி கல்யாணம் பகவான் அமிர்த கடேஸ்வரர் அனுக்கிரகத்தால் ரொம்பவும் விமரிசையாய் நடந்தது. எனது குடும்பத்தாரும், மற்றும் எனது நண்பர்களும் ஷ்டி முகூர்த்தத்துக்கு விஜயம் செய்தார்கள். எல்லோரும் பேரானந்தம் அடைந்தோம். கோவில் அர்ச்சகர்களும் சகல அலுவலகத்தவர்களும், ஓதுவார்களும் மிக்க அன்புடன் எங்களுக்குச் சகல சௌகரியமும் செய்துகொடுத்து ஆனந்தமாகத் தரிசனம் செய்வித்தார்கள் இக் கோவில் ஸ்தல மகாத்மியத்தை விரிவாக எடுத்து உரைத்தார்கள்.

7-ந்தேதி 108 சங்கு அபிஷேகம் பகவான் அருளாலும், தர்மபுரம் ஆதீனத்தார் சந்நிதானத்தின் உதவியினாலும் விமரிசையாக நடந்தது என்பதை நானும் என் குடும்பத்தாரும் எனது நண்பர்களும், தெரிவித்துக்கொள்ளுவதுடன் என் அன்பார்ந்த நன்றியை சந்நிதானத்துக்குத் தெரிவிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

(Sd ) S. A. K. Chinnathambi Chettiar,
M. C. S. Bus Service, Coimbatore &
Trustee Perur Devasthanam
Perur, Coimbatore.

7—6—64.

# வணக்கம்

இது புரட்டாசித் திங்கள்; இதில் தேவிக்குரிய சிறப்பு வழி பாடாகிய நவாரத்திரி விழா, நலம் பெற நடைபெறும். நமது ஞானசம்பந்தம் அன்னையின் அருளை முதலில் தாங்கி வெளி வருகின்றது. அதனல் அருள்ஞான வாரியில் அனைவரும் துளைதல் கூடும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களும் இவ்விதழில், தங்கள் அரிய அஞ்செழுத்து அருளுபதேசத்தை வழங்கியுள்ளார்கள். அவ்வுபதேச மொழி 'கொடிக்கவி' என்னும் ஞான சாத்திரத்தை முன்னிலையாகக் கொண்டு முகிழ்க்கின்றது. அவ்வஞ்செழுத்தின் புணைபிடித்து அனைவரும் அருட்கரையை அடையலாம்.

'தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரை, சஹஸ்ராகமம், சித்தாந்த விஞவிடை, தமிழ்கூறும் நல்லுலகம்' என்னும் தொடர்கட்டுரைகளும், மௌன குரு வணக்கப்பாடலும் தொடர்ந்து வெளிவருகின்றன. ''பொறுமையின் சிகரம் — தருமரே'' என்னும் தனிக்கட்டுரையும், திருக்குவளைக் கல்வெட்டுகளும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. அபிராமி தோத்திரப் பாமாலை, தேவியின் அருளை விளக்கி நிற்கின்றது

செய்திகள், எதிர்காலம் என்பவையும் வழக்கம் போல நேயர்களுக்குப் பயன் தரும் வகையில் வருகின்றன. செய்திகளில் மாநில ஆளுநர் வருகை, கலைமகள் விழா, சதசண்டி ஹோமம் என்பவை குறிப்பிடத்தக்கன. எல்லாவகையாலும் ஞானவடி வாகிய தேவியின் தண்ணருளை ஞானசம்பந்தம் நல்குவதாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## கொடிக் கவி

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் — நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

—உமாபதிதேவ நாயனார்.

சைவ சமய ஆசாரியர்கள், 'சமயாசாரியர்' என்றும், 'சந்தானாசாரியர்' என்றும் இருவகையினர். சமயாசாரியர்கள், திருஞானசம்பந்தர் முதலிய நால்வர்கள் என்பதை அனைவரும் அறிவர். சந்தானாசாரியர்கள், 'மெய்கண்டார். அருணந்தி சிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிதேவ நாயனார்' என்னும் நால்வர்கள்.

சமயாசாரியர்கள் வெவ்வேறிடத்தில் வெவ்வேறு காலத்தில் தோன்றித் தனியே இருந்து சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்தனர். சந்தானாசாரியர்கள் அவ்வாறின்றி ஒருவர் மாணாக்கர் மற்றொருவர்; அவர் மாணாக்கர் இன்னொருவர் என்ற முறையில் வழிவழியாக நின்று சைவ சமயத்தைப் பரப்பினார்கள். சமயாசாரியர்கள், 'தேவாரம், திருவாசகம்' என்னும் தோத்திரங்கள் வாயிலாக மக்களது உள்ளங்களைச் சிவநெறியில் ஈடுபடச் செய்தனர்; சந்தானாசாரியர்கள் சாத்திரங்களின் வாயிலாகச் சித்தாந்த உண்மைகளை நிறுவிச் சிவநெறியின் சிறப்பினை விளக்கினர். 'தோத்திரம், சாத்திரம்' என்னும் இரண்டும் சைவ சமயத்தின் இரண்டு கண்களாய் விளங்குகின்றன.

சாத்திரங்களில் மிகச் சிறியதாய்க் காணப்படுவது, 'கொடிக் கவி' என்னும் நூலே. இது நான்கே செய்யுட்களை யுடையது. அவைகளிலும் முதற்செய்யுள் தவிர, ஏனைய மூன்று செய்யுட்களும் நாலடி வெண்பாக்கள். முதற்செய்யுள் கட்டளைக் கலித்துறை. எனினும், இதிற்றான், சைவ சமயத்தின் முடிந்த பொருள் - குருபரம்பரையில் உபதேச முறையாக அறிய வேண்டிய மறைபொருள் - பெரும்பொருள் அடங்கியுள்ளது. மேலும் அப்பொருளுக்கு வெற்றிக்கொடி கட்டுகிறது கொடிக் கவி.

சந்தானாசாரியர் நால்வருள் நான்காமவர் உமாபதிதேவ நாயனார். இவர் தில்லைவாழந்தணர்களுள் ஒருவர். மறைஞான சம்பந்த சிவாசாரியரிடம் உபதேசம் பெற்றவர். ஞானம் முதிர்ந்து சீவன் முத்திநிலையில் நின்ற அக் குருமூர்த்திகள் வருணாச்சிரமங்களையெல்லாம் கடந்த நிலையில் இருந்ததனால், அவரை அடுத்து நின்ற உமாபதி தேவரும் அவ்வாறாகித் தில்லைக்குக் கிழக்கில் உள்ள கொற்றவன் குடியில் திருமடம் ஒன்றை அமைத்துக்கொண்டு, தம்மை அடைந்த பக்குவர்களுக்கு சித்தாந்த ஞானோபதேசத்தைச் செய்துகொண்டு நிட்டை புரிந்து இருந்தார். நடராஜப்பெருமானே, தன்னை அடைந்த பக்குவராகிய, 'பெற்றான் சாம்பான்' என்ற, தாழ்த்தப்பட்ட குலத்தவராகிய ஒருவருக்கு முத்திகொடுக்கும்படி ஒரு திருமுகம் எழுதியனுப்பினார்.

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப் — படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் திக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"

என்ற அத் திருமுகப் பாசுரத்தைக் கண்ட உமாபதிதேவ நாயனார், அடியார்க்கு எளியனாய் உள்ள பெருமானது திருவருளை நினைந்து உருகி, சத்தியோ நிர்வாண தீட்சையால், பெற்றான் சாம்பானுக்கு முத்திகொடுத்தருளினார்.

தில்லை மூவாயிரவருள் ஒவ்வொருவர் ஒவ்வொரு நாளில் கூத்தப்பெருமானைப் பூஜிப்பது என்ற முறைப்படி உமாபதி சிவாசாரியார் பூஜிக்கவேண்டிய நாளில் அவர் பூஜிக்கலாகாது என்று சொல்லி, அடுத்தவரை பூஜிக்க ஏற்பாடு செய்தனர்.

இதை அறிந்த உமாபதிதேவ நாயனுர் பெரிதும் வருந்தினுர். ஆனுல், அன்று காலையில் சென்று பார்க்கையில் இலிங்க உருவாய் உள்ள திருச்சிற்றம்பலமுடையார் காணப்படவில்லை. அந்தணர்கள், திடுக்கிட்டுத் துயரக் கடலுள் ஆழ்ந்தனர். அது காலை, 'நாம் உமாபதியின் பூஜாக்கிருகத்தில் இருக்கின்ருேம்' என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அந்தணர்கள் கேட்டு அனைவருமாகச் சேர்ந்து கொற்றவன் குடிக்கு ஓடி உமாபதி சிவனுரது திருமடத்தை அடைந்து, திருச்சிற்றம்பல முடையார் அங்கு இருத்தலைக்கண்டு அச்சமும் வியப்பும் கொண்டு, உமாபதி தேவரை வணங்கித் தங்களை மன்னித்துக் கோயிலுக்கு வருமாறு வேண்டி அழைத்துவந்து, திருச்சிற்றம் பல முடையாரையும், கூத்தப்பெருமானையும் ஆறுகாலத்திலும் பூஜிக்கச்செய்தனர். உமாபதி சிவாசாரியரும் பெருமான் தமக்குச் செய்த கருணையின் பெருக்கை நினைந்து மனம் உருகிச்சென்று வழிபட்டு இன்புற்ருர்.

இதன்பின் சில ஆண்டுகள் சென்றன. மக்கள் மனம் என்றும் ஒருநிலையாய் நில்லாது மாறும் இயல்புடையது என் பதற்கும், அது மறதியை உடையது என்பதற்கும் இணங்க மற்ருெரு நிகழ்ச்சி நிகழ்ந்தது.

ஆண்டுதோறும் கூத்தப்பெருமானது பெருவிழாவிற்குக் கொடியேற்றி அதனை நடத்துவிக்கும் முறை ஓர் ஆண்டில் உமாபதி சிவாசாரியாருக்கு வந்தது. ஆனுல், அதற்கு அவ் வந்தணர்கள் உடன்படாமல் மறுத்துவிட்டார்கள். அப் பொழுது கொடியேற்ற நாளில் அந்தணர்கள் தங்களது மந்திர தந்திரங்களால் எவ்வளவு முயன்றும் கொடி ஏறவில்லை. அது கண்டு அனைவரும் வருந்தியபோது, 'உமாபதி சிவன் வந்தால் கொடி ஏறும்' என்று ஓர் அசரீரிவாக்குப் பிறந்தது. அந்த ணர்கள் அதிசயித்து முன்போலவே உமாபதி சிவாசாரியரை வணங்கி அழைத்துக் கொடி ஏற்றுவிக்குமாறு வேண்டினர். அவ்வமையத்தில் சைவசமயத்தின் உண்மையை அனைவரும் உணர்ந்து உய்யும்வண்ணம் தெரிவித்தற்பொருட்டு, நான்கு திருப்பாட்டுக்களை உமாபதி சிவாசாரியர் கூத்தப்பெருமான் திருமுன்பில் நின்று பாடியருளினுர். கொடிமரத்தில் கொடி, ஒவ்வொரு பாட்டின் முடிவிலும், 'கால், அரை, முக்கால்' என்ற அளவில் முறையே ஏறி, நான்காவது பாட்டின் முடிவில்,

கம்பத்தின் உச்சியில் ஏறிப்பறந்து நின்றது. அந்த நான்காவது பாட்டே மேற்கொடுக்கப்பட்டுள்ளது.

அந்தணர்களும், மற்றையோரும் அதிசயித்து, உமாபதி சிவாசாரியரது பெருமையை உணர்ந்து அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். உமாபதி சிவாசாரியார் கொடி ஏற்றிப் பெருவிழாவை நடத்தி மகிழ்ந்தார். கொடி ஏறப்பாடிய இப் பாட்டுக்களே, 'கொடிப்பாட்டு' என்றும், 'கொடிக்கவி' என்றும் பெயர்பெற்ற நூலாகி விளங்குகின்றன. தில்லை வாழந்தணர்கள் முன்னிலையிலும், ஏனையோர் முன்னிலையிலும் கொடிக்கம்பத்தில் கொடியை ஏற்றிய இப்பாடல்களை, சித்தாந்த உண்மைகளுக்கு ஜெயக்கொடி கட்டிய பாடல்கள் என்று சொல்லாம். இதன் முதற்பாடல் சித்தாந்தத்தில் மிக நுணுக்கமாய் உள்ள பொருளைக் கூறுகின்றது.

'ஒளிக்கும் இருளுக்கும் இடம் இவ்வுலகமே. ஆயினும், இரண்டும் ஒரு காலத்திலே இங்குச் சேர்ந்திருப்பதில்லை. ஒளி உள்ள பொழுது இருள் இராது; இருள் உள்ள பொழுது ஒளி இராது. அதுபோல, சிவத்துக்கும், பாசத்திற்கும் ஆன்மாவே இடம். ஆயினும் இரண்டும் ஒரு காலத்திலே விளங்கி நிற்ப தில்லை. சிவம் விளங்கும்பொழுது, பாசம் விளங்காது; பாசம் விளங்கும்பொழுது சிவம் விளங்காது. இனி, ஒளிவந்து இருளைப் போக்குமேயன்றி, இருள் வந்து ஒளியைப் போக்குவதில்லை. ஆனல், சிவம் உயிர்க்குயிராய் எப்பொழுதும் நீங்காதிருக்கவும், பாசம் ஆன்மாவை மறைத்து நிற்கின்றது. இஃது அதிசயம். அஃது எவ்வாருயினும், உயிர்பாசத்தில் அழுந்தியிருத்தலும், அதனினின்றும் நீங்கி, படலம் படர்ந்தகண் அப்படலத்தி னின்றும் நீங்கி ஒளியைப் பெற்றது போலத் திருவருளைப் பெறுதலும் உண்மை என்று சொல்லிக் கொடிகட்டினேன்.''

இவ்வாறு கூறுகின்றது அப்பாட்டு. இதனல், உயிர் தானே அறியாது பிறர் அறிவிக்கவே அறிதல், எல்லாவற்றையும் ஒருங்கே யறியாது ஒவ்வொன்ருய் அறிதல், அறிந்தாங்கறியாது விட்டுவிட்டு அறிதல், வேறு நின்று அறியாது அது அதுவாய் அழுந்திநின்றறிதல், ஒரு முறையிலே முற்ற அறியாது படிமுறை யால் அறிதல் என்ற இவைகளை இயல்பாக உடைய தூலசித் தாதலின் அஃது அணுதியே சிவத்தை உணரமாட்டாதுபாசத்தில் அழுந்திற்று; எனினும் அது, படிமுறையால் பாசத்தினின்றும்

நீங்கித் திருவருளைப் பெறுதல் திண்ணம் என்னும் நுண்பொருள் குறிப்பாக உணர்த்தப்பட்டதாம். இது சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உண்மையாதல் தெளிவு.

முதற்பாட்டில் கேவல நிலையைக் கூறிய இந்நூல், இரண்டாம்பாட்டில் சகல நிலையையும், மூன்றும் பாட்டில் சுத்த நிலையையும் கூறி, நான்காம் பாட்டாகிய இறுதிப் பாடலில் சுத்த நிலையில் நிற்போர் ஓதத்தக்கதாகிய பஞ்சாட்சர மந்திரத்தின் நுட்பங்களை யெல்லாம் மறைபொருளாகக் கூறி முடிக்கின்றது.

பஞ்சாட்சரம், தூல பஞ்சாட்சரம், சூட்சும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மஹாகாரண பஞ்சாட்சரம், அதிசூட்சும பஞ்சாட்சரம்'' என ஐந்து வகையாகச் சொல்லப்படும். "வாதுளசுத்தாக்கியை'' என்ற ஆகமத்தில் பஞ்சாட்சரம், "தாரம், பிராஸாதம், மிஸ்ரம், ஸ்தூலம், சூட்சமம், சுத்தம்', என்று ஆறுவகையர்கச் சொல்லப்பட்டது. பிராசாதமந்திரத்தை "சுத்தம், மூலம், தத்துவம், ஆதி, ஆத்மா'' என ஐந்து வகையாகக் கூறியுள்ளது. பிராஸாத மந்திரமும் பஞ்சாட்சரத்தைப் போலவே சிவபூஜைக்கும், சிவயோகத்திற்கும் இன்றியமையாதது.

பொதுவாக யாவரும் அறியும்படி திருமுறைகளிலும், மற்றும் சில பாடல்களிலும் ஒருவாறு சொல்லப்படுவன, தூல பஞ்சாட்சரம், சூட்சும பஞ்சாட்சரம்' என்னும் இரண்டுமே. மற்றவைகளை அவிச்சின்ன பரம்பரையாயுள்ள குருமுகத்தில் உபதேச முறையாலேயே கேட்டு அறிந்துகொள்ளல்வேண்டும். ஆதலின், உமாபதி சிவாசாரியார், பஞ்சாட்சரங்களின் வகைகள் எல்லாவற்றையுமே மறைமுகமாக மேற்காட்டிய பாடலில் அருளியுள்ளார்.

சிவநெறியின் உயிராய் விளங்குவது ஸ்ரீ பஞ்சாட்சரமே என்பது அனைவரும் அறிந்தது. வேதத்தின் இருதயத்தில் விளங்குவதும் ஸ்ரீ பஞ்சாட்சரமே.

> "வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
> நாதன் நாம நமச்சி வாயவே''

என்று, ஞானசம்பந்தர் அறுதியிட்டு அருளிச்செய்தார். வேதம் நான்கு எனினும், 'இருக்கு, யஜுர், சாமம்' என்னும் மூன்றுமே

முதன்மையாகக் கொள்ளப்படுகின்றன. அவற்றுள் நடுவில் உள்ளது யஜுர் வேதம். அஃது ஏழுகாண்டங்களையுடையது. அவற்றுள் நடுக்காண்டமாகிய நான்காங்காண்டத்தில் பதினொரு பிரபாடகங்கள் உள்ளன. அவற்றுள் நடுப்பிரபாடகமாகிய ஐந்தாம் பிரபாடகத்தில் உள்ளது ஸ்ரீருத்ரம். அது பதினோர் அனுவாகங்களை யுடையது. அவற்றுள் எட்டாம் அனுவாகத்தில் ஸ்ரீ பஞ்சாட்சரம் சொல்லப்படுகின்றது. (**नमः शिवाय च शिवतराय च**) இதனால், ஸ்ரீபஞ்சாட்சரம் வேதத்தின் இருதயத்தில் விளங்குதல் தெளிவாகும்.

தமிழ்வேதமாகிய திருமுறைகளில் தேவாரங்கள் முதன்மையானவை. அவை சம்பந்தர் தேவாரம். 'அப்பர் தேவாரம். சுந்தரர் தேவாரம்' என மூன்று பகுதியாய் உள்ளன. அவற்றில் நடுவில் உள்ளவை அப்பர் தேவாரம். அவை மூன்று திருமுறைகளாய் உள்ளன. அவற்றுள் நடுத்திருமுறையாகிய திருக்குறுந்தொகை நூறு திருப்பதிகங்களை யுடையது. அவற்றுள் ஐம்பத்தொன்றாந் திருப்பதிகமாகிய திருப்பாலைத்துறைத் திருப்பதிகம் பதினொரு திருப்பாடல்களை யுடையது. அவற்றில் நடுப்பாடலாகிய ஆறாந்திருப்பாடலில்,

"விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாது சிவாய என்று
எண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே"

என ஸ்ரீ பஞ்சாட்சரம் சொல்லப்பட்டது. இதனால், 'வடமொழி வேதம், தமிழ்மொழி வேதம்' என்னும் இருமொழி வேதமும்" தங்கள் இருதயத்தில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தையே கொண்டிருத்தல் தெளிவாகின்றது. இவற்றால், எல்லாவகையான மந்திரங்களினும் தலையாய மந்திரம் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரமே என்பது நன்கு விளங்குகின்றது.

"ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமே"

என்பது சேக்கிழார் திருவாக்கு. இவ்வாறு 'ஆதிமந்திரம், என்றும், மூலமந்திரம்' என்றும் சொல்லப்பெறுவது பஞ்சாட்சரம் ஒன்றே. சமயாசாரியர் நால்வரும் இதனைப் பலவகையாக வற்புறுத்தியுள்ளனர்.

" வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே"

" செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே"

" இம்மை வினைஅடர்த் தெய்து போழ்தினும்
அம்மையினுந் துணை அஞ்செழுத்துமே"

என்று ஞானசம்பந்தரும்,

" கற்றுணைப் பூட்டிஓர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே"

" நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே"

" விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே"

" நமச் சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச் சிவாயவே நானறி விச்சையும்
நமச் சிவாயவே நாநவின் றேத்துமே
நமச் சிவாயவே நன்னெறி காட்டுமே"

என்று நாவுக்கரசரும் பலவாறாக அருளியுள்ளார்கள், சுந்தர மூர்த்தி சுவாமிகள், திருவைந்தெழுத்தை ஒருகாலும் மறக்க லாகாது என்பதற்கு, " நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சி வாயவே" என்று ஓர் அரிய திருப்பதிகத்தை அருளிச் செய் தார். மாணிக்கவாசக சுவாமிகள் தமது திருவாசகத்தை " நமச்சிவாய வாழ்க" என்றே தொடங்கினார். மேலும் "நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" என்று கூறுகிறார். "சிவாய நம என்று நீறணிந்தேன் - தருவாய் சிவகதி" என்று இறைவனைக் கேட்கின்றார், நாவுக்கரசர். ஆகவே, சைவசமய ஆசாரியர் பலரும் உலகுக்கு உபதேசிப்பது, பஞ்சாட்சரம் ஒன்றையேயாம்.

சமயாசாரியர்கள் இவ்வாறு வெளிப்படையாக யாவரும் அறியும்படி பஞ்சாட்சர மந்திரத்தைப் பொதுவாக அருளிச் சென்றாலும், சந்தானசாரியர்கள் அதனை உபதேச முறையில் சிறப்பாக அவரவரது பக்குவ நிலைக்கு ஏற்பப் பகுத்து உபதேசித்து வந்தனர். இவ்வுபதேச முறை, திருக்கயிலாயத்தில்

சிவபெருமான் கல்லால் மர நிழலில் தட்சிணுமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து, நந்தி பெருமானுக்கு உபதேசம் செய்து, அவர் வாயிலாக இவ்வுலகில் வழிவழியாய் நின்று நிலவச் செய்த முறையாகும்.

இச் சந்தானம், 'அகச்சந்தானம், புறச்சந்தானம்' என இருவகையாகும். அகச் சந்தானத்தில் உள்ளவர், திருக்கயிலாயத்திலே இருப்பவர்கள். அவர்கள், 'நந்திபெருமான், சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர்' என்னும் நால்வராவர். புறச் சந்தானத்தில் உள்ளவர்கள், நிலவுலகில் வந்து மக்களுக்கு உபதேசித்து வாழ்ந்து இறைவன் திருவடி அடைந்தவர்கள். அவர்களே மெய்கண்டார் முதலாக மேலேசொல்லப்பட்ட நால்வர். இவர்களில் முதல் ஆசாரியராகிய மெய்கண்டார், அகச் சந்தாஞசாரியரில் நான்காமவராகிய பரஞ்சோதி முனிகள்பால் உபதேசம் பெற்றவர். நான்காமவராகிய உமாபதி சிவாசாரியரிடம் உபதேசம் பெற்ற மாணவர் பலரது வழியால் திருக்கயிலாய பரம்பரை இன்றும் இந்நிலவுலகத்தில் நின்று நிலவி, சிவபெருமான் நந்திதேவர் வாயிலாக வழங்கிய உபதேசத்தைப் பக்குவிகளுக்குச் செய்து வருகின்றது. அப்பரம்பரையே தருமபுர ஆதீனம்.

இவ்வுபதேச முறையில் பஞ்சாட்சரத்தில் ஒவ்வோர் அட்சரத்திற்கும் ஒவ்வொரு பொருள் உள்ளீடாக அமைந்துள்ளது. அதனை, மெய்கண்டார்,

"அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டு"

என மிக நுட்பமாக அருளினர். அருணந்தி சிவாசாரியர்,

"அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு"

எனச்சிறிது விளக்கமாகக் கூறினர். மெய்கண்டார் மாணவருள் மற்றொருவராகிய திருவதிகை மனவாசகங் கடந்தாரும் சந்தாஞசாரியருள் நான்காமவராகிய உமாபதி சிவாசாரியரும்,

"ஈசன் அருள் ஆவி எழிலார் திரோதம் மலம்
ஆசில் எழுத்து ஐந்தின் அடைவாம்"

என்றும்,

"திருவெழுத் தைந்தில் ஆன்மாத் திரோதமா சருள் சிவஞ்சூழ்
தரநடு நின்ற தொன்றும்"

என்றும் மிக விளக்கமாகக் காட்டியுள்ளார்கள். உமாபதி சிவாசாரியார், 'திருவருட் பயன்' என்னும் நூலில், '**அஞ்செழுத்தருள் நிலை**' என்ற ஓர் அதிகாரத்தை வைத்து, அதில் இதனை விரிவாகப் பேசுகின்றார்.

இம்முறையில் பஞ்சாட்சரத்தை நகாரம் முதலாகச் சொல்வதிலும், சிகாரம் முதலாகச்சொல்வதே சிறந்ததாகின்றது' அதனால், நகாரம் முதலாக உள்ளது, தூல பஞ்சாட்சரமும், சிகாரம் முதலாகஉள்ளது, சூட்சும பஞ்சாட்சரமும்ஆகும். மேலே கொடுக்கப்பட்டுள்ள கொடிக்கவிப்பாட்டில், '**அஞ்செழுத்து**' என்றது, பொதுவாக அனைவராலும் சொல்லப்படும் இந்த இரண்டையும் குறிக்கும்.

இனி உபதேசத்தில் ஆசாரியராவார்க்கு, பஞ்சாட்சரம், பிரணவத்துடனும், மற்றும் இரு பீஜாட்சரங்களுடனும் உபதேசிக்கப்படும். அதனால், "**எட்டெழுத்து**" என்றது, அச் சிறப்பு உபதேச பஞ்சாட்சரத்தைக் குறிப்பது. ஆசாரியரல்லாத ஏனையோர்க்கு, பீஜாட்சரங்கள் இன்றிப் பிரணவத்தோடு மாத்திரமே உபதேசிக்கப்படும். அதனால், '**ஆறெழுத்து**' என்றது, அப் பொதுவுபதேச பஞ்சாட்சரத்தைக் கூறியதாம். தூல பஞ்சாட்சரம் சமய தீட்சையிலும், சூட்சும பஞ்சாட்சரம் விசேட தீட்சையிலும் உபதேசிக்கப்படும் அங்ஙனம் உபதேசிக்குங்கால் ஆசாரியராவார்க்கு எட்டெழுத்தாகவும், ஏனையோர்க்கு ஆறெழுத்தாகவும் உபதேசிக்கப்படும்.

பஞ்சாட்சரத்தில் திரோதான சத்தியையும், ஆணவமலத்தையும் குறிக்கும் எழுத்துக்கள் இரண்டையும் நீக்கிச் சொல்வது காரண பஞ்சாட்சரம். இதனைப் பிரணவத்தோடு சொல்வதையே "**நாலெழுத்து**" என்று கூறுகின்றது கொடிக்கவி. இதனை மற்றும் இருபீஜாட்சரங்களுடன் சொல்லுதல், 'ஆறெழுத்து' என்பதில் அடங்கிற்று. இது, நிர்வாண தீட்சைபெற்று உலகப் பற்று நீங்கி, இறைவன் திருவருள் ஒன்றையே நோக்கி நிற்பவர்களுக்கே உரியது. அதனால் இது, '**முத்தி பஞ்சாட்சரம்**' என்றும் சொல்லப்படும். இதன் பயன், மலத்தின் வாசனை அறவே நீங்குதல்.

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி"

என்ற மெய்கண்ட தேவர், "**விதி எண்ணும் அஞ்செழுத்தே**" எனச்சூத்திரத்திலும், "**இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க**" என்று வார்த்திகத்திலும் அருளியது, இம் முத்தி பஞ்சாக்கரத்தையேயாம்.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீ இருத்தி"

என்று அருளியது, இதற்குப் பொருந்தும என்பர். இதனை, தலை மாணிக்கம்' எனப்படும் வகையில் கூறுதலும் உண்டு.

இனி ஆன்மா மலத்தின் நீங்கியதோடல்லாது, தன்னையும் மறந்து அருளேயாய் நிற்கும் நிலையைக் குறிக்கப் பஞ்சாட்சரம் இரண்டெழுத்தாய் நிற்கும்.

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே"

என்ற திருமந்திரத்தைக் காண்க. இது, 'மஹாகாரண பஞ்சாட்சரம்' எனப்படும்.

இனி, சிவமும் சத்தியும் வேறல்ல. அதாவது, சிவம் இல்லாமல் சத்தியோ, சத்தி இல்லாமல் சிவமோ இருத்தல் இயலாது. இருந்தால்இரண்டும்இருக்கும்: இல்லை என்றால், இரண்டும் இல்லை. ஆகையால், பஞ்சாட்சரம் இரண்டெழுத்திற்குமேல் குறைத்துச் சொல்லப்படுதல் இல்லை என்பது ஒரு மரபு. அருளாய் நிற்கும் நிலையையுங் கடந்து சிவத்தில் அதீதமாய் நிற்கும் நிலையைக் குறிக்க, பஞ்சாட்சரம் ஓரெழுத்தாகவும் சொல்லப்படும் என்றும்; அஃது, 'அதிசூட்சும பஞ்சாட்சரம்' என்றுசொல்லப்படும் என்றும்,

"மாயநட் டோரையும் மாயா மலமெனும் மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் தாயைமறந்து
ஏயுமதே நிட்டை என்றான் எழிற்கச்சி ஏகம்பனே"

என்ற பட்டினத்தார் பாடலில் இப்பொருள் நன்கமைந்துள்ளது என்றும் கூறுதல் மற்றொரு மரபு.

"சியெழுத் தொன்றே சிந்தையிற் கருதத்
தூயநற் சுடராய்த் தோன்றுவை என்றான்"

(திருச்செந்தூர் அகவல்) என்ற சிற்றம்பல நாடிகள் வாக்கைக் காண்க.

'பஞ்சாட்சரம் இரண்டெழுத்திற்குக்கீழ் இல்லை' என்ற மரபில், 'பிஞ்செழுத்து' என்பது சத்தி எழுத்து என்றும், "பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்" என்றது சத்தி எழுத்தும், சிவத்தின் எழுத்தும்கூடிய இரண்டெழுத்து மந்திரம் என்றும் சொல்லப்படும். "பஞ்சாட்சரம் ஓர் எழுத்தாயும் நிற்கும்" என்னும் மரபில், "பிஞ்செழுத்து" என்றது, மேற் சொல்லிய இரண்டெழுத்து மந்திரம் என்றும் "பெருவெழுத்து" என்றது, சிவத்தின் எழுத்து மாத்திரமான ஓர் எழுத்தைக் குறிக்கும் என்றும் கொள்ளப்படும். எழுத்தெண்ணிக்கை கூறுது" பிஞ்செழுத்து, பெருவெழுத்து, என்றதனால் இவை பீஜாட்சரங்களோடுகூடிநிற்றல், கூடாது நிற்றல் இரண்டையும் குறிக்கும்.

இங்ஙனம் பலவகையாகச் சொல்லப்படும் பஞ்சாட்சரங்களைப் படி முறையாக ஓதுவதே அவைகளை நெஞ்சில் அழுத்துதலாம். அவ்வாறு ஓதினால் முதலில் உலகம் மறைந்து அருள் வெளிப்படும்; அவ்வருளைப் பற்றி நின்றால் சிவம் விளங்கி ஆனந்தம் பெருகும். அருள் வெளிப்படும் நிலையேபேசும் எழுத்து. ஆனந்தத்தில் அழுந்தும் நிலையே பேசா எழுத்து. பஞ்சாட்சரத்தினால் இவ்விருபயனையும் உலகிற்குக் கூத்தப் பெருமான் தடையின்றி வழங்கக் கொடி கட்டினார் உமாபதி சிவாசாரியார்.

பஞ்சாட்சரங்களை ஓதுமிடத்துப் பேரன்போடு ஓதுதல் வேண்டும் என்பதை,

> "காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
> ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது"

என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கால் உணரலாம்.

எங்கள் ஆதிபரமாசாரியராகிய குருமூர்த்திகளும், தங்கள் சிவபோகசாரத்தின் முடிவில்,

> "ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்"

என்ற தனோடு,

> "நேசமுடன் அஞ்செழுத்தை நீ நினையாய்"

என்று அருளிச் செய்தார்கள். அதன்படி அஞ்செழுத்து, எட்டெழுத்து முதலியவற்றின் உண்மைகள் உபதேச முறையில் மறை பொருளாய் அமைந்துள்ள இக் கொடிக் கவியை, ஆன்ம லாபத்தை விரும்பும் அனைவரும் நல்லாசிரியரை அடுத்து உணர்ந்து நலம் பெறுவார்களாக.

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 23, இதழ் , பக்கம் 519 இன் தொடர்ச்சி )

(ஆ) அஃறிணைக்குரிய குறிப்புவினை :

இதற்குரிய ஈறுகளைத் தொல்காப்பியர் விதந்து கூறுது இதுகாறும் கூறப்பட்ட தெரிநிலைவினைக்குரிய ஈறுகளே குறிப்பு வினைக்கும் ஈருய்ப் பாலுணர்த்தும் என்பர். தெரிநிலைவினை ஈறுகளுள் குறிப்பு வினைக்கும் ஏற்பன : து.. று. அ. என்பன. டு என்னும் ஈறு குறிப்புவினைக்கே உரியதாம். "டுக்குறிப்பிணுகும்" என்ற நன்னூலும் காண்க (24).

இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள என்பனவும்; பண்புகொள் கிளவியும், பண்பிணுகிய சினை முதற் கிளவியும், ஒப்புப்பற்றி வருஞ்சொல்லும் ஆகிய இப்பத்தும் வினைக்குறிப்பிற்குரியனவாம் (23).

விணுப் பொருளையுடைய 'எவன்' என்னும் வினைக்குறிப்புச் சொல் அஃறிணை இருபாலுக்கும் ஒப்ப உரியதாம் (22) நன்னூலாரும்,

"எவனென் விணுவினைக் குறிப்பிழி யிருபால்" எனக் கூறுமாறு காண்க. (வினை : 31)

5. விரவு வினை :

உயர்திணை அஃறிணையாகிய இருதிணைக்கும் உரிய வினைகளை விரவுவினை என்பர். இதனை எண்வகையாகப் பிரித்து விளக்குவர். அவையாவன. (1) முன்னிலை வினைமுற்று (2) வியங்கோள்வினை முற்று (3) வினையெச்சம் (4) இல்லை என்னும் சொல் (5) வேறு என்னும் சொல் (6) செய்ம்மன என்னும் வாய்பாட்டு முற்று (7) செய்யுமென்னும் வாய்பாட்டுச் சொல் (8) செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் என்பன(25).

**1. முன்னிலை வினைமுற்று:**

இ, ஐ, ஆய் ஆகிய மூன்று ஈறுகளும் முன்னிலை ஒருமைக்கு உரியனவாம். இவை உயர்திணை ஆணொருமை, பெண்ணொருமை, அஃறிணையொருமை யாகிய முப்பாற்கும் உரியவாம் (26).

இர், ஈர், மின் ஆகிய மூன்று ஈறுகளும் முன்னிலைப் பன்மைக்கு உரியனவாம். இவை உயர்திணைப் பலர்பால், அஃறிணைப் பலவின்பால் ஆகிய இருபாலுக்கும் உரியவாம் (27).

2. வியங்கோள் வினைமுற்று:

இதற்குரிய ஈறுகளை ஆசிரியர் விதந்து கூறவில்லை. எனினும் சேனவரையர் அ, அல், ஆல் என்பன இதற்குரிய ஈறுகளாம் என்பர்.

இவ்வியங்கோள் சிறுபான்மை தன்மை முன்னிலைக் கண்ணும், பெரும்பான்மை படர்க்கைக் கண்ணும் வரும். இது, "ஆவாழ்க" என வாழ்த்துதற் பொருண்மைக்கண்ணும் "கடாவுக பாக நின் கால்வல் நெடுந்தேர்" என வேண்டிக் கோடற் பொருண்மைக்கண்ணும் வரும். சங்கர நமச்சிவாயர் விதித்தற் பொருளிலும் வருமென்பர்.

தொல்காப்பியர் வியங்கோளீறு இவையெனக் கூறாதிருக்க, நன்னூலார் க, ய, ர ஆகிய மூன்றும் வியங்கோளுக்குரிய ஈறுகள் என்றும், அது தன்மை முன்னிலையில் சிறுபான்மையும், படர்க்கையில் பெரும்பான்மையும் வருமேனும் மூவிடத்திற்கும் உரியதாதல் பற்றி "இயலும் இடம்பால் எங்குமென்ப" என்றும் கூறுவாராயினர் (29).

3. வினையெச்சம்:

ஒரு வினையைத் தனக்குக் கொண்டு முடியும் சொல்லாகக் கொண்டு தான் எச்சமாக நிற்கும் சொல்லிற்கு வினையெச்சம் என்று பெயர். அவ்வினையெச்சம் செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு ஆகிய ஒன்பது வாய்பாடுகளை உடையது. இவையன்றிப் பின், முன், கால், கடை, வழி, இடம் என்னும் ஈற்றவாய் வரும் சொற்களும் வினையெச்சமாம் (31, 32).

மேற்கூறிய ஒன்பது வாய்பாடுகளுள் செய்து, செய்யூ, செய்பு ஆகிய மூன்றும் தன் வினைமுதல் வினையான் முடியும்.

அம் மூன்று ஈறுகளும் சினைவினையாக நிற்கும் பொழுது தம் வினையாகிய சினைவினையொடு முடியாது முதல்வினையொடு முடியினும் இழுக்கில்லை. நன்னூலாரும்,

"சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்" எனக் கூறுதல் காண்க. (வினை: 26)

இம்மூன்று மல்லாத ஏனைய ஆறுவாய்பாடுகளும் தம் வினை முதல் வினையும் கொண்டு முடியும்; பிறவினையும் கொண்டு முடியும். வினையெச்சங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி வினைகொண்டு முடிதல் இயல்பு; அங்ஙனமன்றி வினையெச்சங்கள் பல வடுக்கி ஒரு வினையையே கொண்டு முடிவதும் உண்டு (33 முதல் 36).

## 4. இல்லை, 5. வேறு, 6. செய்ம்மன என்பன:

இவைபற்றித் தனித்து இலக்கணம் ஒன்றும் கூறப்படவில்லை. "விரவு வினைகளுள் முன்னிலை வினை நீங்கலாக ஏனைய ஏழு சொற்களும் மூன்றிடத்திற்கும் ஐந்துபாலிற்கும் உரியன" என்னும் பொது விதியினல் இம்மூன்று சொற்களும் ஐம்பாற்கும் மூன்றிடத்திற்கும் உரியனவாம் (28). நன்னூலாரும்,

"வேறில்லை யுண்டுஐம் பால்மூ விடத்தன" எனக் கூறுமாறு காண்க. (வினை: 20)

## பெயரேச்சம்: (7. செய்யும், 8. செய்த என்பன)

ஒரு பெயரைத் தனக்குக் கொண்டு முடியும் சொல்லாகக் கொண்டு தான் எச்சமாக நிற்கும் சொல்லிற்குப் பெயரெச்சம் என்று பெயர். அது நிலம், பொருள், காலம், கருவி, வினைமுதல். வினை என்னும் அறுவகைப் பெயர்களையும் கொண்டு முடியும். இங்ஙனம் வரும் பெயரெச்சங்கள் செய்யும், செய்த என்னும் இரு வாய்பாடுகளில் அடங்கி வரும் (37).

செய்யு மென்னும் சொல் முற்ருகவும், எச்சமாகவும் வரும். பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை ஆகிய மூன்றிடத் தொடும் வரும் பொழுது பெயரெச்சமென்றும், இவற்ருெடு வாராதபொழுது முற்றென்றும் பெயர் பெறும் (30, 38).

செய்யுமென்னும் சொல் பெயரெச்சமாய் நிற்கும்பொழுது அதனது ஈற்றயலெழுத்தாகிய உகரம் தான் ஊர்ந்து நின்ற மெய்யொடும் கெடுதலும் உண்டு. (எ—டு) "வாவும் புரவி" என்பது "வாம் புரவி" என வரும். அதுவே முற்ருய் நிற்கும்

பொழுது அதனது ஈற்றயல் எழுத்தாகிய உகரம் தான்மட்டும் கெடுதல் உண்டு; அன்றித்தான் ஊர்ந்து நின்ற மெய்யொடும் கெடுதலுண்டு. (எ-டு) "சாரல் நாடவென் தோழியுங் கலுழ்மே" என்புழி "கலுழுமே" என்பதன்கண் ஈற்றயல் நின்ற உகரம் தான்மட்டும் நின்று கெட்டு "கலுழ்மே" என்றாயிற்று. "அம்பலூரும் அவனொடு மொழிமே" என்புழி "மொழியுமே" என்பதன் கண் ஈற்றயல் நின்ற உகரம் தான் ஊர்ந்துநின்ற மெய்யொடும் கெட்டது.

இங்ஙனம் நூலினும், உரையினும் கண்ட கருத்துக்களையும், செய்யுமென்னும் ஈற்றிலுள்ள "உம்" ஈறு 'உந்'தாகத் திரிதலும் உண்டு என்னும் இடையியல் 44-ஆம் நூற்பாவின் கருத்தையும் இணைத்து நன்னூலார்,

"செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்உந் தாகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே"

எனக் கூறுதல் காண்க (14). (வினை: 22)

பெயரெச்ச வினையெச்சங்கள் எதிர் மறுத்துச் சொல்லினும் தத்தம் பொருள் நிலையில் வேறுபடா. இக்கருத்தினையும் உருபுகள் எதிர்மறுத்துமொழியினும் தம் பொருள் நிலையில் திரியா என்னும் வேற்றுமை மயங்கியல் 24-ஆம் நூற்பாவினையும் இணைத்தே நன்னூலாரும்,

"உருபும் வினையும் எதிர்மறுத் துரைப்பினுந்
திரியா தத்தமீற் றுருபின் என்ப" (பொது: 2)

எனக் கூறுதல் காண்க (39).

இவ்விருவகை யெச்சங்களும் தாம்தாம் கொண்டு முடிக்கும் சொற்களின் இடையே பொருந்துதற்கு இயன்ற வேறு பிற சொற்கள் வரினும் அவற்றை ஏற்றுக்கொள்வர் (40).

இங்ஙனம் எச்சங்களுக்கும் அவைகொண்டு முடிக்கும் சொற்களுக்கும், உருபுகளுக்கும் அவைகொண்டு முடிக்கும் சொற்களுக்கும், முற்றுக்களுக்கும் அவை கொண்டு முடிக்கும் பெயர்களுக்கும் இடையே வரும் சொற்களை "இடைப்பிறவரல்" என்பர் நன்னூலார்.

"உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமாம் ஏற்பன"

என அவர் கூறுமாறு காண்க. (பொது: 5)

(தொடரும்)

# பொறுமையின் சிகரம் - தருமரே !

செஞ்சொற்கொண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.,

"பொறுமையின் சிகரம் இராமரா, தருமரா" என்ற செய்தியை ஆராய்ந்து பார்க்கும்போது தருமரே பொறுமையின் சிகரமாக அமைந்துள்ளார் என்பதைப் பலகோணங்களில் நின்று நாம் முடிவு கூறலாம். பொதுவாகப் பாரத இராமாயணங்களின் பொது முடிவுகளாக உள்ளவை எவை என்பதை முதற்கண் தெளிந்துகொள்ளுதல் வேண்டும்.

இதனைக் 'காப்பியத்தின் பண்பு' என்று கூறலாம். பிறனுக்குரிய மனைவியை விழைவோர் தம் சுற்றத்தாரோடும் கெடுவர் என்பதே இராம காதையின் காப்பியப்பண்பு. பொறுமையை விடச் சீரிய கவசம் வேறில்லை என்பதை விளக்குவதே பாரதத்தின் காப்பியப்பண்டு. எனவே இராமபிரானின் பொறுமையை விடப் பாரதக்காப்பியத் தலைவராக உள்ள தருமரது பொறுமையே பாரதம் என்ற சோலைமுழுதும் நறுமணம் வீசுதலைக் காணலாம்.

தருமர் பொறுமையின் அவதாரம் என்றே கூறலாம். பொறுமை என்பது ஒரு மலை ஆகுமானல், அதன் இடைப் பகுதியில் இருக்கும் இராமபிரானைவிட சிகரத்தில் உள்ள தருமரே அதிற் சிறந்தவர் என்பதை வியாச முனிவரே காட்டுகிறார்; அவர்வழி நின்று வில்லிபுத்தூராரும் விளம்புகின்றார். எப்படி ?

துரியோதனனது, அவை கூடியிருக்கிறது. பாஞ்சாலி அழுது புலம்பியபடி அவையிற் புகுகின்றாள். துச்சாதனன் அந்தப் பத்தினித் தெய்வத்தின் துகிலுரிய முற்படுகின்றான். சூதாடி அனைத்தையும் தோற்றுவிட்ட பாண்டவச் சகோதரர்கள் நிற்கிறார்கள். அது எத்தகைய நிலை? கொண்ட மனைவி கண் கலங்கி மாற்றான் முன்னே வருகிறாள். தன் ஆடையையும் பறி கொடுக்கும் அவல நிலை. வீமன் கதாயுதத்தை நோக்குகிறான்; வில் விசயனோ காண்டீபத்தைப் பார்க்கிறான், அப்போதுதான்

தருமர்க்கு ஒரு சோதனைக்கட்டம். பொறுமையின் சிகரமான தருமர் தம்பியர் சினத்தை யடக்குகின்றார். இது தருமரது பொறுமையை உலகம் காணும் முதல் இடம்.

காப்பியத்தின் தேகத்தில் பல சம்பவங்களைத்தாண்டி அப்பால் வருகிறோம். பாண்டவர் வனவாசக் காலம். துருவாச முனிவர் பாண்டவர் இருக்கைக்கு வருகின்றார். துரியோதனன் அறுசுவை விருந்து நடத்திய போது 'என்னிடத்தில் உண்டாற் போலப் பாண்டவரிடமும் விருந்து உண்ண வேண்டும்' என்று வஞ்சகமாக வேண்டிக்கொண்டபடி வருகை தந்தார் அம்முனிவர். கண்ணபிரானருளால் விருந்து முடிந்தவுடன் வேண்டும் வரம் கேள் என்று துருவாசர் கூறுகின்றார். தருமர் கேட்ட வரம் யாது? "துரியோதனன் முதலியோர் மீது தாங்கள் சினம் கொள்ளாமல் இருக்கவேண்டும்' என்பதே அவர்கேட்ட வரம் எவ்வளவுக்கு அந்நல்லோரின் உள்ளம் பண்பட்டிருந்தால் இவ்வுரை வெளிவரும் என்பதை நாம் எண்ணிப்பார்த்தல் வேண்டும்; பொறுமையின் திலகமாக—மாற்றார் செய்த தீச் செயல்களுக்கெல்லாம் வருந்தாத தியாக உள்ளம் படைத்த சீரிய பாத்திரப்படைப்பாகவே தருமர் விளங்குகின்றார்.

'காட்டிடைப் புகுந்தபோதும் கலக்கமற்று உவகை கூர்த்தான்' என்கின்றார் வில்லியார். அவ்வாறு விராடநாடு சென்று தங்கியிருக்கும்போது கங்கர் என்ற மாற்றுப்பெயரில் இருக்கும் வாய்ப்புத் தருமர்க்கு நேர்கின்றது. அங்கேயும் தருமரது பொறுமையின் உயர்வு ஒரு நிகழ்ச்சியால் விளங்குகின்றது. விராட மன்னனின் மைத்துனன்-கீசகன், வண்ணமகள் என்றமாற்றுப் பெயருடைய திரௌபதியைத் துரத்தியபடியே அரசவைக்கு ஓடிவருகின்றான். அனைவரும் பார்க்கும்போது அவள் கைகளையும் பற்றுகிறான். என்ன அநியாயம்! தம் கண்களுக்கெதிரே மனைவியை மாற்றான் தொடுவதா? வீமன் சினம் கொண்டு மரம் ஒன்றைப் பிடுங்குகின்றான். தருமர் குறிப்பாகப் "பச்சை மரம் அடுப்புக்கு உதவாது;" என்று கூறி அவன் சினத்தை ஆற்றுகிறார். பொறுமையின் எல்லை இங்கே பொலிந்து தோன்றுகின்றதல்லவா? இதுமட்டுமல்ல; அதே நாட்டிலே மற்றொரு சோதனை. விராடமன்னன் சூதாடும் கவற்றினைக்கொன்று தருமர் நெற்றியில் அடித்து விடுகின்றான். இரத்தம் சொட்டுகின்றது. அப்போதும் அறநெறி முதல்வராகிய தருமரின் உள்ளம் பொறுமையை இழக்கவில்லை. வீராடன் மகன் உத்தரன் தருமரது இந்தப் பொறுமையை வியந்து வாழ்த்துகின்றான்.

" செறுப்பது பெருமையன்று சிறியவர் செய்த தீமை
பொறுப்பதே பெருமை யென்று '

கூறித் தருமர் காலடிகளில் வீழ்கின்ருன். சோழன் மாவளத்தான் தம்பி வட்டினல் தாமப்பல் கண்ணனர் என்ற தமிழ்ப்புலவரை எறிய, அத்தண்டமிழ்ப்புலவர் சினந்து கூறிப் பின் உணர்ந்து திருந்திக்கூறும் பாடல் புறநானூற்றில் (44) உள்ளது. அதை ஒப்பிட்டுக் காணும்போதுதான் பொறுமைக் கடலாக உள்ள தருமரது பெருமை நமக்கு நன்கு புலனுகின்றது.

தருமரது இந்த நெற்றித் தழும்பைக் கண்டதும் தம்பியர்க்குச் சினம் பெருகுகின்றது. பிழைபுரிந்த விராடனை ஒறுத்தல் வேண்டும் என்று சீறியெழும்போது, அறத்தின் வடிவாகிய தருமர் அறவுரை யாது? அது பண்பட்ட உள்ளத்தின் வெளிப்பாடாக வெளிப்படுகிறது.

" ஒன்றுதவி செய்யினும் அவ் வுதவி மறவாமல்
பின்றை அவர் செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர் "

ஆம் : தருமன் கூறும் இந்த இயல்புக்கு எடுத்துக்காட்டு அவரே என்று காண்கின்ருேம்.

குருகுலத்துக் குமாரர்களுக்குள் போர் மூண்டே விடுகின்றது. பன்னிரண்டாம் நாள் போர். துரோணுசாரியரும் தருமரும் போர் செய்கின்ருர்கள். துரோணரை வென்றுவிட்ட தருமர் அவரை இளைப்பாறச்செய்து மீண்டும் வெல்கின்ருர். இங்கே பெருங்கருணை விளங்கும்படி இந்நிகழ்ச்சி உள்ளது. பதினும் நாட்போரிலே துரியோதனனை முறியடிக்கும் தருமர் அவன் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்து மன்னிப்பு வழங்கி உயிர்ப்பிச்சை வழங்குவது மறக்கமுடியாத ஒரு கட்டம். நினைத்திருந்தால் துரியோதனனைத் துண்டாடிவிடுதலும் கூடும். ஆயினும் பொறுமைச் சிகரமாக விளங்கும் இப் புண்ணியப் பெருவீரர் அச்செயல் புரியாத திறம் காண்கின்ருேம்.

துரியோதனனது தீமையெல்லாம் மறந்து தருமர் பொறுமையோடு கூறும் அறிவுரை நம் உள்ளத்தைத் தொடுகின்றது; துரியோதனனே அரியணையில் வீற்றிருந்து விளங்கத் தாமும் தம்பியரும் குற்றேவல் புரிதற்கு உடன்படுக என்று உருக்கமுடன் உரைக்கும் உள்ளப்பாங்கு தருமர்க்கன்றி வேறெவர்க்கு வாய்க்கும்? இராமபிரானுக்கு இத்தகைய வாய்ப்பே இல்லை,

தந்தைக்கடங்கிய தனயராய்க் கானகம் சென்ற இராமபிரான் பொறுமையின்றிச் சீதையை நினைந்து புலம்பிய பகுதிகளும், அழுத காட்சிகளும் இராமகாதையிற் காணலாம். 'தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுதலே தலையாய பொறுமை' என்ற குறள் வழி நின்று தருமர் விளங்கினர்; இராமபிரான் 'வாலி' போன்று தம்மை யிகழ்ந்தாரையும் ஒறுக்கும் இயல்பினை இராமகாதை காட்டுகின்றது. 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்ற பழமொழிக்குத் தருமரது வாழ்வுதான் இலக்கியமாகுமே யன்றி இராமபிரான் வாழ்வு எடுத்துக் காட்டாகாது என்பது இங்குக் காட்டப்பட்ட சான்றுகளால் தெளிவாகும்.

"செறுப்பது பெருமை யன்று
சிறியவர் செய்த தீமை
பொறுப்பதே பெருமை"

என்பதுதான் தருமரது கொள்கை என்பது பாரதம் காட்டும் பண்பு, அந்தப் பண்புக்கு எடுத்துக்காட்டு, அறம் சிறந்த அண்ணல் தருமரே யாதலின், அவரே பொறுமையின் சிகரம் - பொறுமையின் கடல் - பொறுமையின் அவதாரம் என்பது உறுதி.


குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A.. B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 23, இதழ் 10, பக்கம் 598 இன் தொடர்ச்சி )

एवं पञ्चविधं प्रोक्तं शेषं पूर्ववदाचरेत् ।
कल्पयेदेक कुण्डंचेत् यथा वित्तानु सारतः ॥ 409

होमंकुर्याद्यथोक्तेन वृह्मांगानां दशांशकम् ।
इत्येतत्त्रिविधं प्रोक्तं समित् द्रव्य मिहोच्यते ॥ 410

இவ்வாறு ஐந்துகுண்ட பக்ஷத்தின்முறை சொல்லி இது சம்பந்தமான மற்ற எல்லாம் முன் கூறப்பட்டதுபோலவே செய்ய வேண்டும். ஒருகுண்ட பக்ஷமானல், பொருள் செலவிற்கேற்ப எல்லாவற்றையும் ஒரே குண்டத்தில் ஹோமம் செய்யவேண்டும். அதாவது மூலமந்திர ஹோமம் எவ்வளவு செய்யப்படுகிறதோ அதில் தசாம்சமாக ப்ரும்மாங்க மந்திரங்களை ஹோமம் செய்ய வேண்டும் என்ற இம்முறையைக் கூறி சமித்து திரவியங்களின் ஹோமமானது சொல்லப்படுகிறது.

वारुणेशान पर्यन्तं जिह्वा स्थानं प्रकीर्त्तितम् ।
हिरण्या वारुणे जिह्वा कनकामध्यतस्थिता ॥ 411

रक्ताचोत्तर जिह्वा स्यात्कृष्णा याम्यदिशि स्थिता ।
सुप्रभा पूर्वजिह्वा स्यादतिरक्ताग्नौ व्यवस्थिता ॥ 412

बहुरूपेश जिह्वास्याज्जिह्वास्थानं प्रकीर्त्तितम् ।
सप्त जिह्वां विभाव्येवं समिद्द्रव्याहुतिं हुनेत् ॥ 413

அக்னிதேவனுக்கு ஏழு நாக்குகள் உண்டு. அக்னியின் முகத்தில் விளங்கும் அந்த ஏழு நாக்குகளையும் குண்ட விஸ்தாரத்தினளவு அக்னியின் முகம் விரிந்து இருப்பதாக பாவித்து

மேற்கில் ஹிரண்யை என்ற நாவையும். நடுவில் கனகை என்ற நாவையும், வடக்கில் ரக்தை என்ற நாவையும், தெற்கில் கிருஷ்ணை என்ற நாவையும், கிழக்கில் சுப்ரபை என்ற நாவையும், தென் கிழக்கில் அதிரக்தை என்ற நாவையும், வடகிழக்கில் பகுரூபை என்ற நாவையும் இவ்வாறு ஏழு நாக்கனையும் நினைந்து சமித்து திரவியங்கள் முதலியவைகளை ஹோமம் செய்யவேண்டும்.

हिरण्यायां समिद्धोमः मधुदुग्धं तथैव च ।
कनकायां धृतं प्रोक्तं दधिपायस मुच्यते ॥ 414

रक्तायांतु चरूं स्तद्वत् फलापूपानि होमयेत् ।
लाजहोमं तु कृष्णायां नीवारं चणकं तथा ॥ 415

सुप्रभायां हुनेत्सक्तु निष्पाव माढकं तथा ।
यवहोमोऽतिरक्तायां वेणुं मुद्गं तथैव च ॥ 416

बहुरूप्यां तिलं माषं सिद्धार्थं गोधूमं तथा ।
द्रव्याण्यन्यानि सर्वाणि कनकायां हुनेत्क्रमात् ॥ 417

சமித்துக்களையும், தேன் பால் இவைகளை ஹிரண்யை என்ற ஜிஹ்வையிலும் (ஜிஹ்வை என்பது நாக்கு) நெய், தயிர், பாயசம் இவைகளை கனகை ஜிஹ்வையிலும், சரு, பழங்கள், அபூபம் இவைகளை ரக்தை என்ற ஜிஹ்வையிலும், பொரி, நீவாரதான்யம், துவரை இவைகளை கிருஷ்ணை என்ற ஜிஹ்வையிலும் சத்துமாவு, மொச்சை, கடலை இவைகளை சுப்ரபை என்ற ஜிஹ்வையிலும், யவதான்யம், மூங்கிலரிசி, பயரு இவைகளை அதிரக்த ஜிஹ்வையிலும், எள், உளுந்து, வெண்கடுகு, கோதுமை, இவைகளை பகுரூப ஜிஹ்வையிலும் மீதியான மற்றைய எல்லாத் திரவியங்களையும் கனகை ஜிஹ்வையிலும் ஹோமம் செய்யவேண்டும்.

कर्षपूर्णेन सर्पिस्तु समिधो द्वादशांगुलाः ।
कांस्य मृत्ताम्रजां स्थालीं संग्रहेत्तिविधिमानतः ॥ 418

प्रस्थाद्य तण्डुलोग्राह्या देशिकस्तु पचेच्चरुन् ।
विधिपक्वं तदानीय ग्रासमात्रेण होमयेत् ॥ 419

முன் கூறப்பட்டபடி ஒரு கர்ஷ அளவான நெய் ஹோமம் செய்யவேண்டும். சமித்துக்கள் பன்னிரண்டு அங்குலமுள்ளதாக இருக்கவேண்டும் (அங்குலம் என்பது மானுங்குலம். அதாவது ஒரு கை முழத்திற்கு இருபத்தினன்கு அங்குலமாகும்), வெங்கலம், மண்பாத்திரம், தாம்பிர பாத்திரம் என்ற ஏதாவதொரு பாத்திரத்தை அளவுப்படி புதியதாகத் தயார்செய்து எட்டுப்படி அரிசியைக் கொண்டுவந்து ஸ்தாலீபாகம் என்ற முறைப்படி ஆசாரியன் சருவை பக்வம் செய்யவேண்டும். முறைப்படி பக்வம் செய்யப்பட்ட சருவை ஒருகவள அளவு எடுத்து ஹோமம் செய்யவேண்டும் (ஸ்தாலீபாகம் என்பது அடுப்பு, பாத்திரம், விறகு அரிசி முதலியவைகளை மந்திரபூர்வமாக ஸம்ஸ்காரம் செய்து அன்னத்தை பக்வமாகச் செய்து தப்தாபிகாரம் சீதாபிகாரம் முதலியவைகளையும் செய்து எடுத்துக் கொள்ளல்)

इन्धनानि क्षिपेदग्नौ कुब्जहस्तेन लाजकम् ।
प्रथुकं धान्यकं सक्तुं मुष्टिमात्रेण होमयेत् ॥ 420

गोधूमं वैणवं चैव नीवारं शुक्तिमात्रतः ।
निष्पावं नवभिः प्रोक्तं चणं दशभिरेव च ॥ 421

சமித்துகளை ஹோமம் செய்யும்போது எல்லா விரல்களையும் சேர்த்துக்கொண்டு சமித்தை எடுத்து ஹோமம் செய்யவேண்டும். இவ்வாறு பொரி, அவல், தான்யம், சத்துமாவு இவைகளை ஒரு முஷ்டி அளவு ஹோமம் செய்யவேண்டும். கோதுமை மூங்கிலரிசி, நீவாரதான்யம், இவைகளை சுக்தியளவு ஹோமம் செய்யவேண்டும். மொச்சை ஒன்பது சுகத்தியளவும் கடலையை பத்து சுக்தியளவும் ஹோமம் செய்யவேண்டும் (225 தான்யம் கொண்டது ஒரு சுக்தியாகும்)

पञ्चांगुल्या हुनेद्व्रीमानाढकं राजमाषकम् ।
कुलुत्थं माषमुद्गं च प्रियंगु श्यामकं तथा ॥ 422

शुक्तिमात्रेण हुत्वातु शुक्त्यर्थं यवसर्षपम् ।
हुत्वा तिलं च मृग्या च हव्यान्ते व्याहृतिं हुनेत् ॥ 423

துவரை மொச்சை இவைகளை ஐந்துவிரல் கொண்ட அளவு ஹோமம் செய்யவேண்டும், கொள்ளு, உளுந்து, பயரு, தினை, சாமை இவைகள் ஒரு சுக்தி அளவும், யவம், கடுகு, இவைகள் சுக்தியின் பாதி அளவும் ஹோமம் செய்யவேண்டும். எண்ணை மிருகீமுத்திரையினல் ஹோமம் செய்யவேண்டும். திரவிய ஹோமத்தின் முடிவில் வியாஹ்ருதி ஹோமம் செய்யவேண்டும்

पञ्चान्नार्थाय चैवोक्तं चाढकं च पृथक् पृथक् ।
तत्तद्द्रव्योक्त मानेन तण्डुलं च क्रमात्पचेत् ॥ 424

அன்ன ஹோமத்தின் பொருட்டு வகைக்கு இரண்டுபடி வீதம் ஐந்துவிதமான அன்னத்தை அததற்குரிய திரவியங்களைக் கொண்டு பக்வம் செய்து ஹோமம் செய்யவேண்டும்.

अग्नौ दर्व्या हुनेद्धीमान्शुद्धान्नं मुद्गमन्नकम् ।
क्षीरान्नं कृसरान्नं च गुळान्नं चाक्षमात्रतः ॥ 425

स्वप्रमाणान्यपूपानि चतुः कृत्वाऽथवा हुनेत् ।
पयोदधिमधु क्षौद्रं खर्जूरं चैक्षवं तथा ॥ 426

स्रुवपूर्णाहुतिं हुत्वा पुन्नागफलवद्गुळम् ।
इक्षु पर्वविशालेन कदळ्यर्धेन होमयेत् ॥ 427

சுத்தான்னம், வெண்பொங்கல், பாலன்னம், எள்ளன்னம், சக்கரைப்பொங்கல் இவைகளை கிழக்கோடிக்காயளவு சுருவத்தினல் ஹோமம் செய்யவேண்டும். அதிரசம் முழுசாகவோ நான்கில் ஒவ்வொரு பங்காகவோ ஹோமம் செய்யலாம், பால், தயிர், தேன், சக்கரை, பேரீச்சை, கற்கண்டு இவைகளை சுருவம் நிறைந்ததாக ஹோமம் செய்யவேண்டும். வெல்லத்தை புன்னக்காய் அளவு ஹோமம் செய்யவேண்டும். கரும்பு ஒரு கணு அளவு ஹோமம் செய்யவேண்டும். வாழைப்பழம் பாதியாக ஹோமம் செய்யவேண்டும்.

( தொடரும் )

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 23, இதழ் 10, பக்கம் 591 இன் தொடர்ச்சி )

## இறைவன் உருவங் கோள்ளுதல்

மாணக்கன் : 'உலகத்தை, இறைவன், உயிர்களது வினை என்னும் ஒழுங்கின்மேல் வைத்துச் செயற்படுத்துகின்றான்' என்பது பொருந்துவதேயாகிறது; அது நிற்க. இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்துங்கால், தான் உருவம் உடையனாய் நின்று தொழிற்படுத்துவானோ? உருவம் இலனாய் நின்றே தொழிற்படுத்துவானோ? என்னும் ஐயம் நிகழ்கின்றது. அது பற்றி முன்னர்ச் சிறிது குறித்தருளினீராயினும், இனிது விளங்க உணர்த்தியருளல் வேண்டும்; ஏனெனில், 'இறைவன் உருவமுடையனாயின், உலகத்தாருள் ஒருவனாய்விடுவன்' என்று ஒரு சாராரும், 'உருவம் இலனாயின், உலகத்தைச் செயற்படுத்தல் இயலாது' என்று மற்றொருசாராரும் கூறுகின்றனராதலின்.

ஆசிரியர் : உருவம் இல்லாததாகிய உயிர் உடம்பைச் செயற்படுத்துதல்போல, உலகிற்கு உயிராய் நிற்கும் இறைவன் உருவம் இன்றியே அதனைச்செயற்படுத்துதல் கூடும்; ஆதலின், 'இறைவன் உருவம் இலனாயின், உலகத்தைச் செயற்படுத்துதல் இயலாது' என்றல் பிழையாம். ஆகவே, உலகத்தைச் செயற் படுத்த மாட்டாமையால் இறைவன் உருவமுடையனாகின்றா னல்லன்; மற்று எதனாலெனின், உலகத்தின் செயற்பாடு, உயிர்கட்குப் பயன்படுவதாய் அமைதற்பொருட்டே உருவ முடையன் ஆகின்றான் என்று உணர்.

மாணக்கன் : உலகத்தின் செயற்பாடு, இறைவன் உருவம் உடையனாயவழி உயிர்கட்குப் பயன்படுதலும், உருவம் உடைய னாகாதவழி பயன்படாமையும் எங்ஙனம் என்பதை விளக்கி யருளல் வேண்டும்.

ஆசிரியர் : விநாயகக் கடவுள், முருகக்கடவுள் போன்ருரை இறைவன் உருவமின்றியே தருதல் கூடுமாயினும், அவர் இறைவன் திருக்குமாரர்கள்என்பதை அவர்தம் அறக்கருணைக்கும் மறக்கருணைக்கும் உரியராயினுர் உணர்ந்து அவ்வப்பயனைப் பெறுதல்கூடாமையின், அன்னேரை இறைவன் உருவங்கொண்டு நின்றே தருதல் இன்றியமையாததாயிற்று.

இனி, கொடிய பன்றியைக்கொன்று அருச்சுனனைக் காத்தமையை உருவங்கொண்டு செய்யாவிடினும் ஒருவாறு பயன் தருமாயினும், அவன் வேண்டிய பாசுபதத்தைக் கொடுத்தலை உருவமின்றிச் செய்யின், அவன், அதனைத் தெளிந்து பயன் கொள்ளுதல் இயலாது.

நரசிங்கத்தை அழித்தமை முதலியவற்றை உருவமின்றிச் செய்யின் பயன்படாமை வெளிப்படை.

கல்லாலின் கீழ் இருந்து நால்வர் முனிவர்கட்கு மெய் யுணர்வைத் தந்தமை போன்றவை உருவம் இன்றியமையாமை சொல்லவேண்டா.

ஆகவே, இவைபோல்வனவற்றை யெல்லாம் இறைவன் தான் உருவமின்றியே செய்யவல்லனுயினும், அவ்வாறு செய்யின் அவற்ருல் பயன் பெறுதற்கு உரியார் பயன்பெரு தொழிதல் பற்றியே உருவங்கொண்டு செய்தான் என்பது தெளிவாதலின், தன் செயல்களை, அவற்ருல் பயன் பெறுதற்கு உரியார் பயன் பெறுதற் பொருட்டே உருவங்கொண்டு செய்வன் என்பது உணர்ந்துகொள்.

மாணுக்கன் : உண்மை! உண்மை!! இறைவன் தனக்கு உதவுதற்பொருட்டு உருவத்தை அவாவாமல், பிறர்க்கு உதவி யாதற் பொருட்டே உருவங்கொள்கின்ருன் என்பது தெளிவா கின்றது. அது நிற்க.

இறைவன் உருவங் கொள்ளுதற்குக் காரணம் எதுவாயினும் உருவத்தை விரும்பியவழி, உருவத்தால் வரும்குற்றங்களெல்லாம் அவனுக்கும் உளவாகுமன்ருே?

உருவத்தால் வருங் குற்றங்கள் யாவை எனின், கூறுவேன் :

உருவத்தை விரும்பினுல், அதனைப் படைத்துக் கொடுத்தற்கு உருவத்தை விரும்பாத மற்ருெருவன் வேண்டும். ஏனெனில்,

உருவம் உடையவரெல்லாம் அவற்றை வேறொருவனாலே பெறுதலின்.

மற்றும், இறைவனுக்கு உருவம் உளதாயின், அஃது அவன் எங்குமாய் நிற்கின்ற நிலையைத்தடுத்து, ஓரிடத்தில் நிற்பவனாகச் செய்துவிடும். ஏனெனில், உருவம் உள்ள இடத்து நிகழும் அறிவும் செயலும்போல, ஏனையிடத்து நிகழ்தல் கூடாமையின்.

இன்னும் இறைவன் உருவத்தைக் கொள்ளின், என்றும் உள்ளவனாகாது, தோன்றி யழிபவனாகிவிடுவான்; ஏனெனில், உருவமெல்லாம் தோன்றி அழிவனவே யாகலின்.

அன்றியும், 'உருவம்' எனப்படுவனவெல்லாம் மாயையின் காரியமே யாகலின், உருவத்தை உடையவனாயின், இறைவனும் மாயையை உடையவன் ஆகிவிடுவான்.

இப்படிப்பட்ட பல குற்றங்கள் உருவத்தால் வருவன வாகலின் இறைவனை, 'உருவமுடையனாவன்' என்றல் எவ்வாறு பொருந்தும்?

ஆசிரியர்: நீ, மிகவும் நுண்ணறிவுடையைபோல வாதிக்கின்றாய்; இவ்வாதங்கள் அறிவுடையோர்க்கு மிகவும் நகை விளைப்பனவேயாகும். எவ்வாறெனின், கேள்:

பிறவிக் கடலில் வீழ்ந்துள்ள உயிர்கள் போன்றவன்தானோ இறைவன்? இவ்வாறாயினன்றோ, உயிர்களுக்கு அவற்றிற்குரிய உடம்பை வேறொருவன் படைத்துக் கொடுப்பதுபோல அவனுக்கும் படைத்துத்தர வேறொருவன் வேண்டும்? இறைவன் பிறவிக்கடலில் வீழாத பெருமையுடையவனாய், பிறவிக் கடலில் வீழ்ந்த உயிர்கட்கெல்லாம் உடம்பினைத் தருபவனாகலின், அவன் தனக்கு வேண்டிய உடம்பைத் தானே தன் இச்சையால் கொள்வன் என்று கொள்ளுதலில் தவறு என்னை?

மாணக்கன்: உபசாரமாக அங்ஙனம் கொள்ளினும், உண்மையாக அங்ஙனம் கொள்ளுதற்குச்சான்றில்லை; ஏனெனில், உருவம் உடையவர்களில் ஒருவரேனும் தம் உருவத்தைத் தம் இச்சையின் வழிக் கொண்டோர் இல்லை. எவர் ஒருவரேனும், தம் உருவத்தைத் தம் இச்சையின்படியே கொண்டவர் உளராயின், இறைவனும் அங்ஙனம் தனக்கு வேண்டிய உருவத்தைத்தானே தன் இச்சையாற் கொள்வன் என்று

துணிதல் கூடும்; அங்ஙனம் இன்மையால், அவ்வாறு துணிதல் எங்ஙனம்?

ஆசிரியர்: 'உருவம் உடையவர் எவரும் தம் இச்சைப்படி உருவங் கொள்ளவில்லை' என்றாய்; யோகத்தால் ஏனையோரினும் ஆற்றல் மிகப் பெற்ற யோகிகள், தாம்விரும்பிய உருவத்தை எடுத்துக் கொள்ளுதலையும், அனுமன் முதலானவர்கள் தாம் வேண்டியவாறு உருவங்கொண்டமையையும் கண்டுங் கேட்டும் அறிந்திலையோ?

மாணாக்கன்: அறிந்துள்ளேன்; அவை, இறைவன் தன் இச்சைவழியே உருவங்கொள்வன் என்பதற்கு எவ்வாறு சான்றாகும்? ஏனெனில், யோகியர் முதலியோர் நம்மிலும் சிறிது உயர்ந்தவர்களே யன்றி, முற்றிலும் நம்மில் வேறுபட்டவரல்லர்; எவ்வாறெனில், அவர்களும் வேறொருவன் கொடுத்த உடம்பைப் பெற்று அதிற்கட்டுண்டும், ஓரளவில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றை, அறியவும் செய்யவும் மாட்டாதும் நிற்பர். ஆகவே, யோகியர் முதலியோர் போல, இறைவன், தான் வேண்டிய உருவத்தைக் கொள்வன் எனக்கூறின், நம்மில் ஒருவன் ஆகாவிடினும், யோகியர் முதலியோருள் ஒருவனாவனன்றோ?

ஆசிரியர்: அறியாது சொன்னாய் ஏனெனில், யோகியர் முதலானவர், தாம் வேண்டிய உருவத்தைக் கொள்ளுதல், தவஞ் செய்து பெற்ற இறைவன் திருவருளாலே என்பது எல்லார்க்கும் உடன்பாடாகலின், அத்திருவருளாற்றலைத் தனதாக முற்றிலும் உடையவனாய்ப் பிறருக்கும் அதனைச் சிறிது வழங்கியருளுகின்ற இறைவன், அவனிடத்தினின்றும் அதனைச் சிறிது பெற்று, அப் பெற்ற அளவில் சிறிது பெருமையுற்று நிற்கும் யோகியர் முதலியோருள் ஒருவனாதல் எவ்வாறு?

மாணாக்கன்: அடிகள் அருளியது உண்மையாயினும், உருவம் எனப்படுவனவெல்லாம் மாயையேயாகலின், உருவத்தை இறைவன் தானே கொள்ளினும், பிறர் கொடுப்பக் கொள்ளினும் மாயையில் தொடக்குண்பவனே ஆவன்; அதனால், 'அவன் தானே தன் இச்சைப்படி உருவங்கொள்வன்' என்று கொள்வதனாலே, நம்மோடு அவனிடைப் பெரிய வேறுபாடு ஒன்றும் அமைந்துவிடாது.

ஆசிரியர் : முழுதும் உணர்ந்தாய் போல மொழிகின்றாய்! 'உருவம்' என்னும் பொதுமையாலே, 'உருவம்' எனப்படுவன யாவும் மாயையாகிவிடா. எவ்வாறெனில், 'ஆடை' என்றும், 'அணிகலம்' என்றும் சொல்லப்படும் அவையெல்லாம் அவ்வப் பொதுத்தன்மையாலே பொருளால் ஒன்றாகமாட்டா. ஆடை, தோலாலுமாம்; நூலாலுமாம்; பட்டாலுமாம். அணிகலம், வெள்ளியாலுமாம், பொன்னாலுமாம். மணியாலுமாம். எவ்வாறாயினும்,' 'ஆடை' என்றும், 'அணிகலம்' என்றும் சொல்லப்படும் அவையெல்லாம் ஒருதிறத்தனவே; வேறுபாடில்லை என்பார் உளராயின், அவரினும் பேதையார் உலகத்து இலராவர். ஆகவே, அணிபவரது திறத்திற்கேற்ப, ஆடை, அணி முதலியவற்றின்திறம் வேறுபடுதல்போல, உடையவரது திறத்திற்கு ஏற்ப, உருவத்தினது திறமும் வேறுபடும்.

எனவே, உயிர்கள் மலமுடையனவாகலின், அவற்றிற்கு மலத்தின் வகையாகிய மாயா உருவம் உளதாகும். இறைவன் மலம் இல்லாதவனாகலின், அவனோடு மலத்தின் வகையாகிய மாயைக்கு யாதும் தொடர்பு உண்டாதல் இல்லை. ஆகவே, அவனுக்கு அவனது சத்தியே உருவமாய் அமையும். அச் சத்தி அவனது அருளே யாமாகலின், அவனது திருமேனிகள் யாவும், அருட்டிருமேனிகளே யாம் என்பது உணர்க.

மாணாக்கன் : இறைவன் கொள்ளுகின்ற உருவத்தை, 'மாயை' என்று கொள்ளாது, அவனது சத்தியாகிய 'அருள்' என்றே கொண்டாலும், உருவங்கள் எல்லாம், ஒரு காரணத்தினின்றும் தோன்றும் காரியமேயாகும். அக்காரியம், 'விருத்தி, பரிணாமம், விவர்த்தனம்' முதலாகச் சொல்லப்படும். விருத்தியாவது, படம் (துணி) குடில் (கூடாரம்) ஆதல்போல்வது, பரிணாமமாவது, மண் குடமாதல்போல்வது, விவர்த்தனமாவது, இப்பி வெள்ளியாய்த் தோன்றுதல்போல்வது. இவையெல்லாம் அடிகள் அறிந்தனவேயாதலின், உருவம், 'அருள்' என்னும் காரணத்தில் தோன்றும் எனின், விருத்தியாய்த் தோன்றுமோ? பரிணாமமாய்த் தோன்றுமோ? விவர்த்தனமாய்த் தோன்றுமோ? என்னும் வினா எழும். அதற்கு யாதேனும் ஓராற்றால் விடை கூறினும், காரியங்களெல்லாம் அழிபொருளே யாதலின், இறைவனது உருவமும் அத்தன்மையதாம் எனல் வேண்டிவரும். ஆதலின், இறைவனை, உருவம் உடையவன் என்றல் எவ்வாற்றானும், பல தடைகளுக்கு உரியதேயாகின்றதன்றோ?

ஆசிரியர்: உனது அறிவு வியப்பிற்குரியதாகின்றது; என்னையெனின், உலகப்பொருள்களிற் கண்ட விதிமுறைகளையே இறைவனிடத்திலும் வைத்து ஆராயத் துணிந்தனையாகலின். அது நிற்க.

உனது ஆராய்ச்சியின்படி கூறின், இறைவன், 'காற்று முதலியனபோல நுண்ணிய உருவத்தையோ, தீ நீர், மண் முதலியனபோலப் பரிய உருவத்தையோ உடையவனுகான்; ஆகாயம்போல அருவமாய் நிற்பன்' எனல் வேண்டும். அங்ஙனங் கூறின்; இறைவன், 'அருவம். உருவம், அருவுருவம்' எனப் பகுக்கப்பட்ட உலகப் பொருள்களில், 'அருவம்' என்னும் கூற்றில் அடங்குபவனுவான். ஆகாயம் முதலிய அருவப் பொருள்கள் உருவப்பொருளாய் வருதலில்லை. மண் முதலிய உருவப் பொருள்கள் அருவமாய் நிற்றல் இல்லை. ஆதலின். இறைவனும், 'இன்னதன்மையனே; இன்ன தன்மையன் அல்லன்' என வரையறுக்கப்படும் பொருளாவனன்றி மேற் கூறிய எல்லாவகைப் பொருள்கட்கும் மேற்பட்ட, இன்ன தன்மையன் என்று அளக்கலாகாத பெரும் பொருளாவானல்லன். மேலும் இறைவன் அருவமாகியே விடுவானுயின், உயிர்களின் பொருட்டு - அஃதாவது வந்திக்குக் கூலியாளாயும், நாவுக்கரசர்க்கும், நம்பியாரூரர்க்கும் பொதிசோறு அளிப்பவனுயும் வந்து உதவியதுபோல உதவுதற்பொருட்டு - உருவங்கொள்ள விரும்புவனுயின், அது மாட்டாதவனுகிவிடுவான். ஆதலால், உலகப் பொருளின் வேறுபட்டவனுய், எல்லாம் வல்லவனுய் உள்ள அவனை, 'அருவம்' என்ருே, 'உருவம்' என்ருே, 'அருவுருவம்' என்ருே வரையறுத்தலும், அவ்வரையறைபற்றி 'அவன் உருவமாய்வாரான்; அருவமாய்த்தான் நிற்பான்' என்ருே, 'உருவமாய்த்தான் வருவான்; அருவமாய் நில்லான்' என்ருே கூறுதல் கூடாது. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட அவன் தன் இச்சைப்படி எவ்வாறும் ஆவான் என்றே உணர்தல் வேண்டும். அங்ஙனமாகவே, அவனதுஉருவத்தை 'விருத்தியோ பரிணமமோ' என்பது முதலாக ஆராய்ந்து இன்னதென வரையறுத்தலும், அவ்வரையறையால் அதற்குத் தோற்ற நாசங்கள் கூறுதலும் பொருந்தாது எனத்தெரிந்துகொள். அன்றியும், உருவப்பொருளே யன்றி அருவப்பொருளும் அழிவுடையதன்றி, அழியாது நிற்பதன்ருகலின், 'இறைவனை உருவன் அல்லன்; அருவனே' எனக்கொள்ளுதலால் வரும் பயன் ஒன்றும் இல்லை.

இனி, அறியாமையும், விருப்பு வெறுப்புக்களும் ஆணவ மலத்திஞலே வருவனவாகலின், அம்மலம் இல்லாத இறைவனுக்கு அவை உண்டாதற்குக் காரணம் இல்லையாம். ஆகவே, அருட்டிருமேனியை உடையனுயபொழுதும் இறைவன், மாயா உடம்புடைய நம்மனோர்போல ஓரிடத்திலே மட்டும் இருத்தலும், விருப்பு வெறுப்புக்களின் வழியே இன்பத் துன்பங்களில் அகப்பட்டுக் கட்டுண்டலும் இலஞவன் என்பதும் உணர்ந்துகொள்.

இறைவன் தனது உண்மை நிலையில் தனக்கென உருவம் இலஞகலின், அவனை உருவம் முதலியன இலஞகக் கூறுதல் அவனது சொருபலட்சணம் எனப்படும் உண்மை நிலை நோக்கி என்றும், அத்தகையோஞகிய அவன் உயிர்கள்பொருட்டு எண்ணிறந்த உருவங்களைக் கொள்வஞதலின், அவனை, அளவற்ற உருவம் முதலியன உடையஞகக்கூறுதல் அவனது 'தடத்தலட்சணம்' எனப்படும் பொதுநிலை நோக்கி என்றும் பகுத்துணர்ந்துகொள். இதுபற்றியே,

"ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ"
— திருவாசகம். திருத்தெள்ளேணம்.

என்ருற்போலும் அருள்வாக்குக்கள் எழுந்தன.

இறைவன் போக வடிவங்கொண்டாலல்லது உயிர்கட்குப் போகம் அமையாது; யோக வடிவம் கொண்டாலல்லது அவைகட்கு ஞானம் உதியாது; வேக வடிவம் கொண்டாலல்லது உலகிற்குவரும் துன்பம் நீங்காது. இவைகளை இறைவன் சனகாதியர்பொருட்டு யோகியாய் இருந்தகாலத்தில் உயிர்கட்குப் போகம் முதலியவை அமையாதிருந்தமையால் அறிந்துகொள்.

இனி, உயிர்கள் பொருட்டு இறைவன் பல உருவங்களைக் கொள்ளினும், அவன், உலகத்திற்கு அப்பாற்பட்டவனேயாவன் என்பதை, மாலும் அயனும் அடிமுடி தேடி அறியாது நின்றமையால் அறிந்துகொள். இன்னும், 'போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம்' என ஒன்றற்கு ஒன்று மாருன வடிவங்களை ஒருவனே கொள்ளுதலால், அவற்றுள் ஒன்றும் அவன்பொருட்டாகாது, உயிர்கள் பொருட்டாம் என்பதும், ஆகவே, அவற்றில் அவன் கட்டுண்ணுன் என்பதும் விளங்கும்.

இங்ஙனம் பலவகையினும் உணர்த்தியவாற்ருல், இறைவன் தனது உண்மை நிலையில், 'அருவம், உருவம், அருவுருவம்' என்னும் மூன்றையும் கடந்து நிற்பவன் என்பதும், பொது நிலையில் உயிர்களின்பொருட்டுத் தானே தனது இச்சையின்படி அருவம் முதலிய மூவகைகளில் எவ்வகையான திருமேனியையுங் கொள்வன் என்பதும், அவையெல்லாம் அவனது அருட்டிரு மேனிகளே யன்றி மாயா சரீரங்கள் அல்ல என்பதும் இனிது விளங்கும். திருமேனி அருளென்பது விளங்கவே, அத்திரு மேனிகளிற் காணப்படும் ஆடை, அணிகலம், படைக்கலம் முதலியனவும், காட்சி தந்து நிற்கின்ற இடமும் எல்லாம் அருளே என்பதும் பெறப்படும். அதனுல், 'இறைவனை உருவ முடையனுகக்கூறின், நம்போன்ருர்க்கு உள்ள குற்றங்களெல்லாம் அவனுக்கும் உள்ளனவாகும்' என்றல் அறியாமையாதல் அறிந்துகொள்.

இவை எல்லாவற்றினும் மேலாக, நாம் இறைவனுக்கு அருட்டிருமேனி உண்டென்று கொள்ளுதல், ஞானசம்பந்தர் முதலிய அருளாசிரியன்மார் அதனைக்கண்டு அருளிச்செய்த அருண்மொழிகள் பற்றியேயாகும். ஆகவே, அத்தகைய அருளாசிரியன்மாரைப் பெருதவர்களே, 'இறைவனுக்கு எவ் வகையிலும் உருவம் உண்டாதல் இல்லை' எனப்பிணங்குவர் என்பது கடைப்பிடித்துக்கொள். (தொடரும்)

---


## "ஞானசம்பந்தம்"

### கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற் றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்.
தஞ்சை மாவட்டம்.

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

(மலர் 23, இதழ் 9, பக்கம் 515 இன் தொடர்ச்சி)

## 2. இயற்கை வளத்தின் இருக்கை.

இயற்கை வளமுடைய நாட்டில் தான் இன்ப வாழ்வும் இருக்க முடியும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வளம் பெற்றதாக இருக்கும் நாடே நல்ல நாடு. நாடெனின், முயற்சி இன்றியே எளிதில் வளங்களை நல்குதல் வேண்டும். வான்புகழ் வள்ளுவரும்,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாடவளந்தரும் நாடு" (குறள்: 739)

என்று கூறியுள்ளார். நாடாவளத்தது தமிழகம். ஆகவே இதனை யாவரும் நாடென்ப! முன்னர் பாலைவனமாக இருந்து பின்னர் செயற்கையாக ஆறுகுளம் வெட்டிப் புனலுய்த்ததால் சோலை வனமாக உருக்கொண்ட நாடுகளும் உண்டு. ஆனால் தமிழ் நாடோ இயற்கையிலேயே நல்ல நீர்வளமும் நிலவளமும் உடையதாக இருந்தது. பொன்னியும் வையையும் பொருநையும் பாயும் போது தமிழகத்தின் நீர்வளத்திற்குக் கேட்கவும் வேண்டுமோ!

கார்காலத்தே நதிகளில் வெள்ளம் கடுகிவரல் இயல்பு; கோடையிலோ அவைகளில் நீர் குன்றிவிடும். ஆனால் தமிழகம், இலைசருகாக ஆதவன் பொசுக்கும் வேனிலிலும் நீர் அருவளம் படைத்தது.

மலையகத்து மலைபோல் ஒழுகும் அருவி இல்லை. வையகம் வளம்பெறப் பொழியவேண்டுமே என்று கருதாது முகில் கடலிடத்து நீரை முகக்க மறந்து விட்டது. ஆற்றில் புனல் பெருகுதற்குக் காரணமாகும் இவையெல்லாம் இவ்வாருக, வற்கட காலம் வந்துற்ற போதிலும் காவிரி நீர் அருது ஓடுகிறது என்பதை முடத்தாமக்கண்ணியார் பொருநராற்றுப் படையில் விளக்குகிருர்.

" மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மான்
எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவும் தோடெரி நைப்பவும்
அருவி மாமலை நிழத்தவும் மற்ற
கருவி வானங் கடற்கோள் மறப்பவும்
பெருவறனாகிய பண்பில் காலையும் "

(பொருந - 232 - 237)

காவிரி பொய்யாது கடுகி வருகிறதாம்.

அருவிவறண்ட கோடையிலும் அருயாணர் உடையது சேர நாடு என்பதை

" கோடை நீடக் குன்றம் புல்லென
அருவி யற்ற பெருவிறற் காலையும்
நிவந்துகரை இழிதரும் நனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன்புலம் வாய் பரந்து மிகீஇயர்
உவலை சூடி உருத்துவரும் மலிர்நிறைச்
செந்நீர்ப் பூசலல்லது
வெம்மை அரிதுநின் அகன்றலை நாடே "

(பதிற்றுப் 28)

என்னும் அடிகளால் அறிந்து கொள்ளலாம்.

மதுரைக்கு அண்மையில் அமைந்த தேனூரின் நீர்வளம் " வேனிலாயினும் தண்புனலொழுகும், தேனூர் " (ஐங்குறு 54) என்று ஐங்குறு நூற்றில் பேசப்படுகிறது.

மலையிற் பிறந்து பாய்ந்துவரும் நதிகள் மலைப்பல்தரத்தோடு பலப்பல பொருள்களையும் அடித்துவந்தன. நக்கீரர் தம் திருமுருகாற்றுப்படையில் பழமுதிர்சோலை அருவியின் செயலை நயம்படக் கூறுகிறார். அகில் சுமந்து ஆரம்தள்ளி, மூங்கில் பறித்து முழங்கிட ஏறுகள், இழுமெனும் ஓசையுடன் இழிகிறது. அதன் வேகத்தால், அருவரை விரிந்த தேன்கூடு அழிகிறது. முற்றிய பலாவின் சுளை எற்றிடும் புனலில் கலக்கிறது. உதிர்ந்திடும் சுரபுன்னை மலர்கள்; உடல்நடுங்கிடும் முசுக்கலை. பெரும்பிடி குளிர வீசி, வாழை முறிந்திட, வளங்கெழு தெங்கு குலை உதிர்ந்திட மோதி வருகிறது. கறிக்கொடிக் கொத்து சாய்கிறது; கரடி அஞ்சி முழைஞ்சிலே சேர்கிறது.

வேறுபல்துகிலின்......அருவி (திருமுருகா. 296. 316)

ஆரங்கண்ணியர் காவிரியும் ஆரமும் அகிலும் சுமந்துவரு வதைப் பொருநராற்றுப்படையில் பார்க்கிறோம்.

" நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி "
(பொருந - 238 - 39)

கருங்குழலாதனுர் என்ற புலவர் மருதநிலத்து நீர்வளத் தைப் புறப்பாட்டொன்றில் அழகுற எடுத்துக் காட்டுகிருர். பொங்கி வருகிறது புதுவருவாய்; மண் பொதிந்து அடைக்க முயல்கின்றனர் மழவர் பெருமக்கள். ஆனல் திரண்டு வரும் பெருக்கைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் மண்ணுக்கு இல்லை. ஆகவே மீன்களைப் பொதிந்த பெருக்கை அடைக்கின்ருர்கள்.

" தண்புனல் பரந்த பூசல் மண்மறுத்து
மீனிற் செருக்கும் யாணர்ப்
பயன்திகழ் வைப்பு " (புறம் 7)

நீர்வளம் காரணமாகத் தமிழகத்தில் உணவுப் பொருள் களும், மணப்பொருள்களும் ஏனையவும் நிரம்பக் கிடைத்தன. அங்காடியில் குவிந்து கிடக்கும் அலையின் தாரமும் மலையின் தாரமும் அலைவளத்தையும் மலைவளத்தையும் எடுத்துக்காட்டும். உலகில் பெருமையாகப் பேசப்படும் தொழில்கள் உழவும் வாணி கமும் ஆகும். இவை, இசை சான்ற இருவகை என்று சிறப்பிக்கப் படுவன. " இருவகையான் இசைசான்ற" என்ற மதுரைக் காஞ்சியின் அடிக்கு உரையெழுத வந்த நச்சினுர்க்கினியர்" உல கத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு வாணிகம்' என்று இருதொழில்களையும் சிறப்பிக்கிருர். இவ்விரு தொழில் களையும் குறிக்கும் வகையில் மதுரை மாநகரத்துப் பூதக் கடவு ளும் நாஞ்சிலும் துலாமும் ஏந்தி நிற்றல் காண்க.

" வாணிக மரபின் நீள்நிலம் ஓம்பி
நாஞ்சிலும் துலாமும் ஏந்திய கையினன் "
(சிலப்பு: அழற்படுகாதை)

இசை சான்ற இருதொழில்களுள்ளும் உழவு ஈடு இணையற் றது. இதன் தலைமை கருதியே வள்ளுவரும்,

"சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனல்
உழந்தும் உழவே தலை"

என்று பாடிப் போந்தார். உழவர், நினைப்பின் எதையும் முடிக்கும் உரமுடையார். அரசை ஆக்கவும் அழிக்கவும் அவர்களால் இயலும். அன்னர் அரசர்க்கும் மேலானோர்.

"பலகுடை நீழலும் தங்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழலவர்"

என்ற வள்ளுவர் வாசகம் எத்துணைப் பொருள் தந்தது! இரப்பார்சுற்றம் இருப்பதும் உழவினுல்; புரப்போர்கொற்றம் பொலிவதும் உழவினுல். ஆகவேதான் இளங்கோவடிகள்,

"இரப்பார் சுற்றமும் புரப்பார் கொற்றமும்
உழவிடை விளைப்போர்"

(நாடுகாண்காதை 149 - 50)

என்று வேளாளரைச் சிறப்பிக்கின்றூர்.

இத்தகு உழவு தமிழகத்தில் மிக உயர்வு பெற்றிருந்தது. உலகிற்கு முதலாக உள்ள உண்டியைக் குறைவற அளிக்கும் மருதவளத்தினைக் கொண்டிருந்தது மூவர் புரந்த நிலம். எங்கு நோக்கினும் பொங்கு செந்நெலும் செங்கரும்புக்காடும் திகழ்ந்தன. மஞ்சளும், மாவும், இஞ்சியும், வாழையும், தெங்கும் கமுகும் தேன் பொங்கும் பலாவும் வளங்காட்டின. காவிரியின் நீர்வளத்தால் வேலி நிலம் (ஐந்து காணி அல்லது இருபதுமா) ஆயிரக்கலம் விளைந்ததாம்.

"சாலிநெல்லின் சிறைகொள்வேலி
ஆயிரம் விளையுட்டாகக்
காவிரி புரக்கும் நாடு" (பொருந 246 - 48)

கன்னலோ என ஐயுறத் தக்க வகையிலே செழித்து வளர்ந்தது செந்நெல். கதிர்களுக்கு இடையே களிறு புகுந்தால் வெளியில் தெரியாது. ஆம் களிற்றையும் மறைக்கும் அளவிற்குக் கதிர்கள் உயரமாக வளர்ந்தன. இதனை மாங்குடி மருதனுர்,

"களிறுமாய்க்கும் கதிர்க்கழனி" (மதுரைக் காஞ்சி)

என்று குறிப்பிடுகிறுர்.

(தொடரும்)

உ

சிவமயம்

# திருக்கடையூர்,

# அபிராமி தோத்திரப் பாமாலை

ஸ்ரீமத். மீனாக்ஷிசுந்தர சுவாமிகள்

அரனையே பிரியாத் தேவி
அபிராமி நாமங் கொண்டாய்
சிரமதிற் கங்கை கொண்ட
சிவனுடை பாகங் கொண்டாய்
வரமெலா மடியா ருக்கு
வழங்கிடு முமைமீ னாட்சி
மரமிடை மந்தி போன்றேன்
மலரடி நினைக்கச் செய்வாய்

குறியெலாம் கடந்த ரூபி
கோதிலாக் கொடியை யொத்தாய்
சிறியனை யடிமை கொள்வாய்
செகத்தபி ராமி யம்மை
பொறிவழி போகா வண்ணம்
போதவை ராக்கிய மீவாய்
மறியினைக் கரத்தில் வைத்தான்
மலரடி பொருந்தச் செய்வாய்

தனித்தொரு பொருளா யில்லாத்
தாயபி ராமி காப்பாய்
செனித்துநான் புவியி லென்ன
சிறியனேன் பிழையே செய்தேன்
முனிந்துநீ தள்ளி விட்டால்
மூர்க்கனேன் போவ தெங்கே
நனித்துணை வேறே யில்லேன்
நாயகி யிரங்கி யாள்வாய்
தனக்கொரு தாய்தா னில்லாச்
சங்கரி யுமைமீ னாட்சி
எனக்குநீ தாயே யான
இயல்பினை யுணர்ந்தே னில்லை

மனத்தினுற் காயத் தாலே
வாக்கினுற் பாவஞ் செய்தேன்
உனக்குநான் மகவே யாவேன்
ஓங்கபி ராமி காப்பாய்

கூற்றினை யுதைத்த வீசன்
கூத்தினைக் காணுந் தாயே
சேற்றினில் வீழ்ந்தேன் பாசம்
சிவசத்தி நீயே காண
ஆற்றலை மிகவுங் கொண்டாய்
அபிராமி யுமைமீ னுட்சி
மாற்றிட வேண்டு மம்மே
மறந்திடா தருளுஞ் செய்யே.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

**1964-ஆம் ஜூன்-மீ 28உ ஞாயிற்றுக்கிழமை திருவோணம் கூடிய நன்னளில் எனது அறுபது ஆண்டு நிறைவு வெய்தியது. அதனை யொட்டி நானும் என் குடும்பமும் நண்பர்களும் முன்னலேயே இவ்வூருக்கு வந்து விடுதியில் தங்கியிருந்து கோயிலில் ஸ்வாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்வித்தோம். பிறகு மிருத்தியுஞ்சய ஜபமும், ஹோமமும், இன்று நடத்திக் கொண்டோம்.**

**இவ்விழாவிற்கு வந்த அனைவர்களையும் இன்ப முகத்துடன் வரவேற்று எங்களுக்கு உணவு முதலிய வசதிகளைச் செய்து கொடுத்த தர்மபுரம் ஆதீனம் திருக்கடவூர் தேவஸ்தான சிப்பந்திகளுக்கும் நாங்கள் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம் ஆலய பூஜை முதலியன மிக ஒழுங்காகவும் சிரத்தையுடனும் நடந்து வருவதைக் கண்ணுற்று இதன் நிர்வாகத்திற்குப் பொறுப்பாய் உள்ள தருமையாதீனம் கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் திருக்கோயில் ஆட்சியினை மிகவும் பாராட்டுகிறேம். வாழ்க தருமையாதீனம்! வாழ்க ஆதீன திருத்தொண்டர்கள்.**

(ஒ-ம்.) K. C. **நாகலிங்க முதலியார்**

**28—6—64.** **சென்னை-5.**

# திருக்குவளை கல்வெட்டுகள்

" கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் "

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார்
திருவையாறு.

## I

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு சவது மார்கழிமாதத் தொருநாள் உடையார் திருக்கோளிலி உடையார்கோயிலில் முன்னுளில் சிவன் படவரில் ஆலன் எழுந்தருளுவித்த அதிபத்த நாயனுர்க்கு திருப்படிமாற்றுக்கு இவன் தன் சாதியார் பக்கல் இரந்துபெற்ற காசாய் கலேயில் காவசேரி ஐயன்னைய பட்டன் மகன் தாமோதரப்பட்டன் பக்கல் நெல் பொலிசைக்கு குடுத்தகாசாய் இவன் ஓடுக்கினகாசு உகூா இக்காசு இரண்டாயிரத்தொருநூறும் கைக்கொண்டு திருப்படிமாற்றுக்கு நாள் ஒன்றுக்கு இருநாழி அரிசி அமுதுபடிக்கு அளிப்போமாகவும் நாங்கள் இப்படி செய்வோமாக ் சம்மதித்தோம்.

## II

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள்

2 சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ம ஆவது எதிராமாண்டு

3 ஆடிமாதத்து இருபதாந்தியதிநாள் உடையார் திருக்கோளி

4 லி உடையார்கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளோ

5 ம் வியாபாரிகளில் மாங்குடையான் பிச்சன் கணபதி ஆண்டார்

6 இசைவு தீட்டுக் குடுத்தபரிசாவது இந்நாள் முதல் திங்கள் திருநாள்

---

இடம்: மகாமண்டபம் வாசலுக்குத் தென்பால் உள்ள கீழ்ப் புறச்சுவர்.

7 திருவாதிரை தோறும் இவர்க்கு நன்ருக பெருமாளும் நாச்சியா

8 ரும் சிறப்பு அமுது செய்தருளி திருவுலாச் செய்தருளவும் ஆளுடை

9 பிள்ளையார் திருஞானமமுது செய்தருளி திருவுலாச் செய் தருளி தேவாரம் செ

10 ய் தருளவும் கடவதாக இந் நாயஞர் திருநாமத்துக்காணி இறையிலியில்விலை

11 கொண்டு இட்ட கீழை வேலிக்கண்டத்து நிலம் கூ இந் நிலம் ஒன்றே மூன்

12 று மாவும் உள்ள முதல்கொண்டு சத்திராதித்த வரையும் இப்படிகளிலே திருவுலாச்

13 செய்தருளக் கடவதாக சம்மதித்தோம் இந்நிலம் ஒன்றே மூன்று மாவுக்கும் பண்

14 டாரத்து இற்றை நாளில் ஒடுக்கின (பணம்) உ௱கூ௰ இப் பணம் இருநூற்று அறுப

15 துக்கும் இந்நிலம் ஒன்றே மூன்றுமாவுங் கொண்டு சந்திரா தித்த வரையும்

16 இப்படி திருவுலாச் செய்தருளப் பண்ணக்கடவதாகச் சம்மதித்தோம். மாங்குடி

17 யான் பிச்சன் கணபதி ஆண்டார்க்கு ஆதிசண்டேஸ்வர தேவர் கன்மிகளோம்

18 இப்படிக்கு உடையார் திருக்கோளிலி உடையார் கோயில் கணக்கு பட்டினமுடையா

19 ன் கணக்கு துறையாண்டான் திருவேகம் படிப்பிரியன் எழுத்து. இப்படிக்கு அறிவேன்

20 மாங்களூர்ச் சீராமப்பட்டனேன். இப்படிக்கிவை கோளிலிப் பெருங்கோயில்

21 உடையார் ஸ:க்ஞானமைக்கு இவை சீராமபட்டனேன். இப்படிக்குகிவை தேவர்

22 கன்மி என்னை யாளுடையானப்புந்தி யாரம்ப பிரமராயன் எழுத்து இப்படிக்கி

23 வை உடையார் திருக்கோளிலி உடையார் கோயில் அகாரணக் கண்காணி

24 செல்வப் பிள்ளையா - - தன்மதேவர் எழுத்து இப்படிக்கிவை கோயில் கணக்

25 கு பட்டினமுடையான் உதவினுன் திருவிராமீஸ்வரமுடையான் எழுத்து.

III

1 வதிஸ்ரீ கோச்சடய பன்மரா
னதிருபுவனச் சக்கரவத்தி கள்ஸ்ரீசு
ன்தரபாண்டிய தேவற்கு யாண்டு
ஸ்வஸ் திஸ்ரீ உடையார் திருக்கோ

5 ளிலி உடையார்கோயில் தப
னமண்டபத்துவார வாசல்
துடங்கி கீழைவாசலே அறு
தியாக நாயகப் பத்திகால்ப்பு
றவாயாக தளம் இடைத்த இது

10 வட வல்லத் திருக்கை இருன்
குடியான் இந்திராவதி நல்
லூர் உய்ய வந்தான் சீகாழிப்
பிள்ளே ஆன ஜயதுங்க பன்மர்
திருப்பணி

15 இன்னுயர்க்கு இவர் சிறுகாலேச் சந்தி
க்கு ஸ்ரீபலி அறுதியாக எரிப்பதாக நிச்
சயித்த விளக்கு இருபதுக்கு இன்னுயனு
ர்திருமனுமத்துக்காணி இறயிலி நிலத்து

19 கோளிலி உள்ளூரில் மாகேஸ்வரவிண்

20 ணகர எம்பெருமான் திருவுடையாட்டத்
துக்கு மேற்கு தடிகல் ருகூபக்குபண்
டாரத்தாருடன்விலே அறுத்துபண்டாரத
து ஒடுக்கின பணம் ௩௰ இப்பணமுப்பதும்
பண்டாரத்தில் ஒடுக்குகையில் இன்னிலம்

25 நாலுமாவும் கொண்டு இவ்விளக்கு இருப
துஞ் சந்திராதித்தவரை எரிக்க சம்மதி

27 த்தோம் கோயில்தானத்தாரோம்.

IV

* ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திருபுவனச் சக்கர வத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு அ வைகாசி மாதத்து இருபத்தொன்பதாந்திய்தி நாள் உடையார் திருக் கோளிலி உடையார்கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர் கன்மிகளுக்குப் பாலைக்குறுச்சி உடையான் அரையன் திருமறைக் காடு உடையானுன வயிராதராயனேன். இசைவு தீட்டுக்குடுத்த பரிசாவது, சந்திர மௌலிப் பேராற்றுப் பெருக்காலே தென் கரையும் அழிந்து இந்நாயனுர்கோவில் வடக்கில் திருவீதியிலே நீர் நலித்து குத்துகையிலே திருவீதி இழன்து இவ்வாற்றுத் தலைவிசை தீரவேணுமென்று........... இவ்வாது குண்டையூர் எல்லையிலே வலக்குவதாக இற்றை நாள் பார்த்து நிச்சயித்த இடத்திலே தலை விலக்கிக் குடுக்கையில் விலக்கின எல்லைக்குக் கிழக்கு இவ்வாற்றுக்கு முன்பு வடகரை தென்கரையாகவும், வடகரை தென்கரைக் குறைவற இவர்கள் கட்டிக் குடுக்க கடவர் களாகவும் பின்பு வடகரையிலுள்ளார் நோக்கிக்கொள்ளக் கடவார்களாகவும் தென்கரைக்கு உள்பட ஆறு உள்பட உள்சூழ் இரண்டாந்திருவீதியாகப்பாலைக் குறுச்சி உடையான் திருமறைக் காடுடையானென்னும் நாமத்தால் திருவீதிசெய்து இப்படி பேசித் திருமாளிகையிலே கல்வெட்டித் தரக்கடவதாகத் தெருவும் இந்நாயனுர் திருநாமத்துக் காணியான விளை நிலத்திலே துகுர்த்துத் திருவீதி செய்யவேண்டுகினில் அடுத்துத்துகுர்க்கிற நிலத்துக்குத் தலைமாறு நிலம் இராசேந்திர சோழவள நாட்டு கானூரான பரமேஸ்வர சதுப்பேதிமங்கலத்து என்காணியான நிலத்திலே இருவேலி நிலம் பயிருக்கும் பொத்தகம் ஏற்றி திருத்து காணியாக நான் விடுகினில் இந்நிலம் இருவேலிக்கும் பொத்தகம் ஏற்றின நி ...... (left infinished)

—o—

* சண்டேஸ்வரர் கோயிலின் மேற்குப்புறச்சுவர்.

# தாயுமான சுவாமிகள்

அருளிய

# மௌனகுரு வணக்கம்

**( மலர் 23, இதழ் 9, பக்கம் 527 இன் தொடர்ச்சி )**

போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற் கிருக்குமது போல்
புருஷர்பெறு தர்மாதி வேதமுட னாகமம்
புகலுமதி னாலாம்பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சியனு மானமுத
னானாவி தங்கடேர்ந்து
நானா னெக்குழறு படைபுடை பெயர்த்திடவு
நான்குசா தனமுமோர்ந்திட்
டானநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற்
றணுபக்ஷ சம்புபக்ஷம்
ஆமிரு விகற்பமு மாயாதி சேவையு
மறிந்திரண் டொன்றென்னுமோர்
மானத விகற்பமற வென்றுநிற் பதுநமது
மரபென்ற பரமகுருவே !
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே. 5

கல்லாத வறிவுமேற் கேளாத கேள்வியுங்
கருணைசிறி தேதுமில்லாக்
காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாய்க்
காதலித் திடுநெஞ்சமும்
பொல்லாத பொய்ம்மொழியும் அல்லாது நன்மைகள்
பொருந்துகுண மேதுமறியேன்
புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருஷார்த்த மேதுமில்லேன்
எல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
கெவ்வண்ண முய்வண்ணமோ
இருளையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறு
மெனக்குநின் னருடாரகம்
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தேஇந்த
வஞ்சகனை யாள நினையாய்
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே. 6

கானக மிலங்குபுலி பசுவொடு குலாவு(ம்)நின்
கண்காண மதயானைநீ
கைகாட்ட வுங்கையா னெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக வேந்திவருமே
போனக மமைந்ததென வக்காம தேனுநின்
பொன்னடியி னின்றுசொலுமே
புவிராஜர் கவிராஜர் தவராஜ னென்றுனைப்
போற்றிஜய போற்றியென்பார்;
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களுமுன்
னட்பினை விரும்புவார்; சுகர்வாம தேவர்முதன்
ஞானிகளு முனைமெச்சுவார்;
வானகமு மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடுமுன்
மகிமையது சொல்லவெளிதோ;
மந்த்ரகுரு வே! யோக தந்த்ரகுரு வே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! 7

சருகுசல பக்ஷிணிக ளொருகோடி யல்லாற்,
சகோரபட்சி கள்போலவே
தவளநில வொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மைய ரனந்தகோடி,
இருவினைக ளற்றிரவு பகலென்ப தறியாத
வேகாந்த மோனஞான
இன்பநிஷ் டையர்கோடி, மணிமந்த்ர சித்திநிலை
யெய்தினர்கள் கோடிசூழக்
குருமணியி மைத்திட்ட சிங்கா தனத்தின்மிசை
கொலுவீற் றிருக்குநின்னைக்
கும்பிட் டனந்தமுறை தெண்டனிட் டென்மனக்
குறையெலாந் தீரும்வண்ணம்
மருமல ரெடுத்துனிரு தாளையர்ச் சிக்கவெனை
வாவென் றழைப்பதெந்நாள்?
மந்த்ரகுருவே! யோக தந்த்ரகுருவே! மூலன்
மரபில்வரு மௌனகுருவே! 8

(தொடரும்)

# செய்திகள்

## சென்னை மாநில ஆளுநர் வருகை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி ஆலயம், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி ஆலயம், வேளூர் ஸ்ரீவைத்தியநாத சுவாமி ஆலயம் ஆகிய மூன்று திருக்கோயில்களுக்கும் சென்னை மாநில ஆளுநர் மாட்சிமைதங்கிய ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்கள் 21—9—64 திங்கட்கிழமை வருகைபுரிந்து தரிசனம் செய்தார்கள்.

சீகாழியில் ஆளுநர் அவர்களின் வருகையை முன்னிட்டு திருக்கோயில் சந்நிதியில் அழகிய வேலைப்பாடுகளுடன் பந்தல் அமைத்து தோரணம் முதலியவைகளால் ஒப்பனை செய்யப் பெற்றிருந்தது. மூர்த்திகளுக்குத் தங்கக்கவசம் முதலியன சார்த்தப்பெற்றிருந்தன. வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கோயில் சந்நிதியில் இருந்து கோயில் மரியாதைகளுடன் பூரணகும்ப மரியாதை செய்து வரவேற்றார்கள். ஆளுநர் அவர்களை ஆதீனம் உயர் அதிகாரிகளும், தேவஸ்தான அலுவலர்களும் உடனிருந்து வரவேற்றனர். சநநிதிகள் தோறும் சிறந்த முறையில் வழிபாடுகள் செய்து வைக்கப்பெற்றன. வழிபாட்டு நேரத்தில் தேவஸ்தான ஓதுவார் திரு. சா. திருஞானசம்பந்தர் திருமுறைப் பாடல்களை இன்னிசையுடன் உருக்கமாகப் பாடி ஆளுநர் அவர்களை மகிழ்வித்தார்.

திருக்கடவூரிலும் முன்னதாகவே சிறந்த முறையில் வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சந்நிதியில் பந்தல் அமைத்து சிறந்த வேலைப்பாடுகள் செய்தும் தோரணங்கள் கட்டியும் அழகுபடுத்தப்பட்டிருந்தது. வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கோயில் மரியாதைகளுடன் பூரணகும்பம் கொடுத்து வரவேற்றார்கள். இங்கும் ஆதீன உயர் அதிகாரிகளும் தேவஸ்தான அலுவலர்களும் உடனிருந்து ஆளுநர் அவர்களை வரவேற்றனர். மூர்த்திகள்

மிகச் சிறந்தமுறையில் அலங்கரிக்கப்பெற்றிருந்தன. சந்நிதிகளில் சிறந்த முறையில் தரிசனம் செய்து வைக்கப்பெற்றது. ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகள் திரு. சாமிஜயாதேசிகர் அவர்கள் சிறந்த முறையில் திருமுறைகளை உருக்கமாக ஓதி ஆளுநர் அவர்களை மகிழ்வித்தார்கள்.

அன்றுமாலை வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலிலும் கனம் ஆளுநர் அவர்கட்குப் பூர்ணகும்ப மரியாதைகள் செய்து வரவேற்பு அளிக்கப்பட்டது. கனம் ஆளுநர் அவர்கள் இரண்டாம் முறையாகத் இத்திருக்கோயில் தரிசனத்திற்கு வருகை புரிந்தார்கள். கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் ஆளுநர் அவர்களை வரவேற்று தரிசனம் செய்துவைத்து உபசரித்தார்கள். ஆளுநர் அவர்கள் சந்நிதிகள்தோறும் உருக்கமாக நின்று தரிசித்தார்கள். சந்நிதிகளில் தேவஸ்தான ஓதுவார் திரு. க. சொக்கலிங்கம் அவர்கள் சிறந்த முறையில் திருமுறைகளை ஓதினார்கள்.

ஆளுநர் அவர்கள் வருகையைக் கண்டு களிக்க மக்கள் ஆங்காங்கு திரளாகக் கூடியிருந்து கண்டு மகிழ்ந்தனர். சென்னைமாநில ஆளுநர் அவர்களுடன் வந்திருந்த அதிகாரிகளிற் சிலர் அன்று மாலை தருமைக்கு வந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானத்தைத் தரிசித்து அருளாசிபெற்றார்கள். பின்னர் ஸ்ரீ சொக்கநாத பெருமானையும், ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலையும், ஸ்ரீ துர்க்காம்பிகைத் திருக்கோயிலையும், ஸ்ரீ தர்மபுரீசுவரர் திருக்கோயிலையும் தரிசித்துச் சென்றார்கள்.

## ஸ்ரீ துர்க்காம்பிகை ஆலயத்தில் சதசண்டி யக்ஞம்

நிகழும் குரோதியாண்டு புரட்டாசித்திங்கள் 20-ஆம் நாள் (6—10—64) செவ்வாய்க்கிழமை முதல் நவராத்திரி விழாவை யொட்டித் தருமையாதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயத்தில் 14-ஆவது சதசண்டி யக்ஞம் தொடங்கி காலை மாலை இருவேளைகளிலும் நடைபெறுகிறது. நவராத்திரி நாட்களில் ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும், நான்காவது கோடியருச்சனையும் நிகழ்கின்றன. ஸ்ரீ வித்யாசக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனை நடைபெறுகிறது.

இந் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் வேதபாராயணம், தேவி மாகாத்மிய பாராயணம், துர்க்காசூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம், முதலியனவும் இரு வேளைகளிலும் நிகழ்த்தப் பெறுகின்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் அவர்கள் இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றுகின்றார்கள், மக்கள் திரளாகக்கூடி தரிசித்து உய்கின்றனர்.

14—10—64 அன்று மகாபூர்ணாகுதியும், சதசண்டிஹவன பூர்த்தியும் நிகழும். 15—10—64 அன்று ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கு யாகக்கலசாபிஷேகம் சிறந்த முறையில் நிகழும்.

## ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

நவராத்திரி விழாவைக் குறித்து ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா தருமையாதீனம் மடாலயம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் 6—10—64 செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறுகிறது. சொற்பொழிவுகள் நாள்தோறும் மாலை 5 மணிமுதல் தொடங்கி நடைபெறுகின்றன.

6-10-64 செவ்வாய்க்கிழமையன்று மாயூரம் திரு. B. திருஞானம் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் பஞ்சாட்சரத்தின் பெருமை, சத்தியின் சிறப்பு, சைவத்தின் மாண்பு முதலிய செய்திகளை விளக்கிச் சிறப்புரை யாற்றினார்கள். அடுத்து தருமையாதீனப் பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம்மல், வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் "பெரியநாயகியம்மை விருத்தம்" என்ற தலைப்பில் அம்மையின் அருள்விளையாடல், சிவப்பிரகாச சுவாமிகளின் கற்பனை நயம், முதலியவற்றை எடுத்து விளக்கிப் பேசினார்கள். பின்னர் ஆதீனக் கல்லூரி நான்காமாண்டு மாணவர் மா. கிருஷ்ணமூர்த்தி "கம்பர்" என்ற தலைப்பில் சிறந்த முறையில் பேசினார்.

தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் நிறைவுற்றது.

7—10—64 புதன்கிழமையன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் "சிவகாமியம்மை இரட்டைமணிமாலை" என்னும்

தலைப்பில் 'குமரகுருபரர் கூறும் அம்மையின் ஆற்றல், பெருமை' முதலியவற்றை விளக்கிப் பேசினார்கள். ஆதீனக் கல்லூரி நான்காமாண்டு மாணவர் க. செல்லப்பா "அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் என்ற தலைப்பில் சிறந்த முறையில் பேசினார்.

8–10–64 வியாழக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் தருமையாதீனப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "உண்ணாமுலையம்மை பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்பில் அம்மையின் அருள்விளையாடல், ஐந்தொழிலாற்றல் முதலியவற்றைக்கூறி, சொற்பொழிவாற்றினார்கள். தருமையாதீனக் கல்லூரி நான்காமாண்டு மாணவர் மா. கலியபெருமாள் "ஒட்டக்கூத்தர்" என்ற தலைப்பில் சிறந்தமுறையில் பேசினார்.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையச் செய்தி

### மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு ஆகஸ்ட் மாதம் 30-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை தியாகராய நகரில் உள்ள ஸ்ரீ சிவவிஷ்ணு ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. மாலை 6-மணிக்குக் குழுவினர் சார்பில் சுவாமி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. பின்னர் முறையாகச் சிவபுராணம் ஓதிக்கொண்டே ஆலயத்தை வலம் வந்து முறையாக வழிபாடாற்றினர். திரு. பி. சுவாமிநாதன் சுவாமி அம்பாள் சந்நிதிகளில் தேவாரத்திருமுறை ஓதி மகிழ்வித்தார். பிறகு ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திரு. நல். முருகேச முதலியார் கேதாரம் என்னும் சொல்லைப் பற்றியும், தலத்தைப் பற்றியும், தியாகராயநகரில் கேதாரநாதர் எழுந்தருளியிருக்கும் சிறப்புப் பற்றியும் அரிய விரிவுரையாற்றினார்கள். திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப்பாடினார். கோயில் நிர்வாகச் செயலர் திரு. சுந்தரம் ஐயரவர்களும், சிவாசாரியர்களும் வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

### விநாயக சதுர்த்திவிழா

சமயப்பிரசார நிலையத்தில் 9—9—64-ல் விநாயக சதுர்த்தி விழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சென்னை நகர

மேயர், திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து அறவுரை கூறினார்கள். சுகப்பிரம்மம், திரு. எஸ். இராமசாமி சாஸ்திரிகள் "விநாயகர் தத்துவம்" பற்றி விளக்கவுரை நிகழ்த்தினார்கள். தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார். திருவல்லிக்கேணி டாக்டர், திரு. சி. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் உபயத்தில் விநாயகருக்கு சிறப்புவழிபாடு நிகழ்த்தப்பெற்று எல்லோருக்கும் மோதகப் பிரசாதம் வழங்கப்பட்டது.

## மாதாந்தர சமயப்பிரசார வழிபாட்டு விழா

நிலைய மன்றத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டு விழா 13—9—64 ஞாயிறன்று காலை தியாகராய நகரில் உள்ள அகத்தியர் ஆஸ்ரமம் என வழங்கும் ஸ்ரீ கந்தரவணி பேசர் ஆலயத்தில் குழுவினர் சார்பில் அபிஷேக ஆராதனை சிறப்பாக நடைபெற்றன. அன்று மாலை 6 மணிக்குக் குழுவினர் சிவபுராணம் ஓதிக்கொண்டே திருக்கோயில் வலம் வந்து முறையாக வழிபாடு இயற்றினர். சந்நிதிகளில் தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் தேவாரத் திருமுறை ஓதிச் சிறப்பித்தார். வழிபாட்டிற்குப்பிறகு ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில், சித்தாந்தவித்தகர், கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் "ஆலயவழி பாடு" என்பது பற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள். திரு. P. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினார். ஆஸ்ரம நிர்வாகியும், சிவாசாரியரும் வரவேற்று உடனிருந்து வழிபாட்டையும், பிரசாரத்தையும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

## நவராத்திரி விழா

நிலையத்தில் 6—10—64 மாலை அருள்மொழியாக, திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் நவராத்திரி விழாவைத் தொடக்கிவைத்தார்கள். சென்னைச் சட்டமன்ற சபாநாயகர், கனம் S. செல்லபாண்டியன் தலைமையுரை நிகழ்த்தினார்கள். திரு. T. N. கோபால சர்மா அவர்கள் தேவி பாகவத விரிவுரை நிகழ்த்தினார்கள். நிலையத்தமிழ் வித்துவான் வகுப்பு மாணவி குமாரி சுசிலா கொற்றவை வழிபாடு என்பது பற்றிப் பேசினார். திரு. P. சுவாமிநாதன் அபிராமி அந்தாதி பாராயணம் நிகழ்த்தினார். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினார்கள். விழா தொடர்ந்து 15—10—64 வரை நடைபெறும்.

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

(குரோதிஞு ஐப்பசிமீ 1உ முதல் 30உ முடிய)
(17—10—64 முதல் 16—11—64 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத்தரும். நஷ்ட தனங்கள் தானுக வந்துசேரும். இல்லறசுகம் ஓங்கும். சத்ருக்கள் தானுக சரண் அடைவார்கள். தனதான்ய விருத்தி ஏற்படும். சனி, புதன் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். வீண் அலைச்சல்கள் ஏற்படச்செய்யும். நஷ்டங்கள் உண்டுபண்ணும். வீண் அபவாதங்களும் ஆரோக்யக்குறைவும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். ஈதிபாதைகளால் சிரமம் காட்டும். சகல காரியங்களிலும் தவக்கம் உண்டு பண்ணும். குடும்பத்தொல்லைகள் அதிகமாகும். தனதான்ய விருத்தியையும் கொடுத்து அதிக செலவினங்களையும்தரும். சனி செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபமேயாகும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். ரிணநிவர்த்தி ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். ராஜாங்கத்தால் பூர்ணமான வெற்றி ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும், உத்தியோக லாபத்தைத்தரும். ஸ்திரசுக ஜீவனம் ஏற்படச்செய்யும். பகவத்பக்தியும் சத்புத்தியும் ஏற்படும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். சகல காரியங்களும் வெற்றியடையும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் தெய்வசக்தியால் பிரகாசம் ஏற்படும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். எவராலும் சாதிக்க முடியாத காரியங்கள் சாதிக்கச்செய்யும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு ஓங்கும். தனதான்ய விருத்திகள் விசேஷமாய் ஏற்படும். ராஜாங்கத்தால் நன்குமதிக்கும்படியான கௌரவங்கள் ஏற்படும். உலகம் பூராவிலும் பிரசித்தியையும் மகாகீர்த்தியையும் உண்டுபண்ணும். ஆரோக்யம் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி 9 பாதங்களும் சுபமேயாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கச்செய்யும். தெய்வசக்தி சாந்நித்யம் ஏற்படும். சத்ருக்கள் ஓடிவிடுவார்கள். நஷ்டதனபிராப்தி ஏற்படும். உலக பிரசித்தி ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதமும் அனுஷம் 1, 2 பாதங்களும் சுபமிராது. வரவுக்கு மிச்சின செலவும் ஆரோக்யக் குறைவும் மனக் கவலையும் உண்டுபண்ணும். அனுஷம் 3, 4 பாதமும் கேட்டை நான்கு பாதங்களும் தூர யாத்திரைகளையும் இடம் மாறுதலேயும் தரும். இல்லற சுகம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மகத்தான துக்கத்திலிருந்து நிவர்த்தி ஏற்படச்செய்யும். களத்திரபுத்திராதிகளால் சுகம் ஏற்படச்செய்யும். கவலைகள் நீங்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். தனதான்ய விருத்தி ஏற்படச்செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம்

மகர ராசி 9 பாதங்களும் எதிர் பாராத மேல் பதவிகளைத் தரும். விசேஷமாய் உத்தியோக லாபம் ஏற்படச்செய்யும், இல்லற சுகம் ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் தானுக வந்துசேரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி - $\frac{3}{4}$.

அவிட்டம் 3, 4 பாதங்களும் சுபத்தைத் தரும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கையும் தன தான்ய விருத்தியும் ஏற்படச் செய்யும், கிரஹ சுகம் ஓங்கும், சதயம் நான்கு பாதங்களும் பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் சஞ்சார பலன்களைத்தந்து சகல காரியங்களிலும் வெற்றி ஏற்படச் செய்யும், சத்ருக்கள் ஓடி விடுவார்கள். நஷ்டமான பொருள்கள் தானுக வந்துசேரும். ராஜாங்கத்தால் பூர்ணமான நன்மை ஏற்படும். தெய்வபக்தி ஓங்கும். கீர்த்தியை உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் நூதனமான ஜீவன லாபத்தைத் தரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு ஏற்படச்செய்யும், தெய்வ சக்தி ஓங்கும்; சத்ருக்கள் சரண் அடைவார்கள். உலக பிரசித்தியும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். ஆரோக்யம் உண்டாகும். இல்லற சுகம்ஓங்கும், வியாழன், வெள்ளி சுபமாகும்

குறிப்பு:- மேற்படி மாதம் சுபிக்ஷகரமாகத் தோற்றம் ஏற் படும். மழைகள் கோடைகாலம்போல் ஆங்காங்கு மழைபெய்யும். பயிர்களுக்குப் பீடை சிற்சில வியாதிகள் ஏற்படச்செய்யும், ஆனாலும் மேற்படி மாதம் 20-ம் தேதிக்குமேல் நிரந்தரமான மழை ஏற்பட்டு ஸஸ்யங்கள் விருத்தியாகும். எவ்வளவு சுபிக்ஷமான சூசனைகள் இருந்தாலும் அன்ருட வாழ்க்கைக்குரிய சாதனங்கள் குறையும். கலகங்களும் அமைதிக்குறைவும் மகா ஜனங்களுக்கு மனம் சாந்தி அடையாமலும் பலவிதமான ஈதி பாதைகளையும் அனுபவிக்கச்செய்யும். தர்ம பூமிகளிலும், பெரியோர்கள் சாதுக்கள் இருக்கும் இடங்களிலும் மேற்கண்ட துக்கங்கள் தானுக விலகும். தக்ஷிண பாரதம் காவேரி தீரம் சுபிக்ஷம் அடையும். மற்ற தேசங்களில் பலவிதமான சிரமங்களை ஜனங்கள் அனுபவிக்க நேரும். தெய்வபலம் உள்ளவர்கள் காப்பாற்றப்படுவார்கள். கடவுள் காப்பாராக.

குருபாதம்

தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்,
திருநெல்வேலி சந்திப்பு.

## ஞாயிறுதோறும் சொற்பொழிவு மாலை 6-30 மணி

4—10—64 மாணிக்கவாசகர் அடைக்கலம்
— திரு. அ. க. நவநீதகிருட்டிணன்
ஏனாதிநாதர்
— திரு. வ. ச. நடராச பிள்ளை
சிவபோகசாரம் - உபதேச விளக்கம்
— திரு. ம. சிவசம்பு

11—10—64 அருளமுதம்
— திரு. ஜெகதீசன், M. A., B. T.
சகலகலாவல்லிமாலை
— திரு. வ. ச. நடராச பிள்ளை
அபிராமி அந்தாதி
— திரு. ம. சிவசம்பு

18—10—64 அன்பும் அறமும்
— திரு. A. சோமசுந்தரம்
திருமூலர்
— திரு. வ. ச. நடராச பிள்ளை
சிவபோகசாரம் - அநுபூதிநிலை
— திரு. ம. சிவசம்பு

25—10—64 கந்தர் அநுபூதி
— திரு. T. V. பாலகிருஷ்ண பிள்ளை, B.A., B.T.
இடங்கழியார்
— திரு. வ. ச. நடராச பிள்ளை
சிவபோகசாரம் - பணியறுத்தல்
— திரு. ம. சிவசம்பு

1—11—64 மண்சுமந்த படலம்
— திரு. T. V. பாலகிருஷ்ண பிள்ளை, B.A., B.T.
சத்திநாயனார்
— திரு. வ. ச நடராச பிள்ளை
சிவபோகசாரம் - துறவின் பகுதி
— திரு. ம. சிவசம்பு

8—11—64 திருமுருகாற்றுப்படை
— திரு. அ. க. நவநீதகிருட்டிணன்
கந்தர் அலங்காரம்
— திரு. வ. ச. நடராச பிள்ளை
முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
— திரு. ம. சிவசம்பு

வந்து கேட்டு இன்புறுக!

நெல்லை அருணகிரி இசைக்கழகம். இராம. கனகசபாபதி.
அமைச்சர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையச் செய்தி

## சுந்தரர் குருபூசைவிழா

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில் 13—8—64 ஆடிச் சுவாதியன்று மாலை 7 மணிக்கு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைவிழா கொண்டாடப்பெற்றது. திருவாசகமணி. திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் சுந்தரர் வரலாற்றுத் தத்துவம் பற்றியும். அவரது செந்தமிழ்ச் சிறப்புப்பற்றியும் அரியதொரு ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார்கள். புலவர் திரு. N. R. முருகவேள் அவர்கள் நன்றி நவின்றார்கள். திரு. நல். முருகேச முதலியார் தலைமையுரை நிகழ்த்தினார்கள். திரு. P. சுவாமிநாதன் கடவுள்வணக்கமும் வாழ்த்தும் பாடினார்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்குவிழா

29—8—64 கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கும் அபிஷேக அர்ச்சனை புரிந்த விபூதி குங்குமப் பிரசாதமும், சந்தனக்குழம்புப் பிரசாதமும், 31—8—64ல் மாலை 7 மணிக்குச் சென்னை சமயப் பிரசார நிலைய மன்றத்தில் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் தலைமையில் புள்ளிருக்குவேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ்ப் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கும் உறுப்பினர்கட்கும் வழங்கப்பட்டன. தருமபுரம், திரு P. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினார். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினார்கள்.

26—9—64 கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் அபிஷேக அர்ச்சனை செய்த விபூதி. குங்குமப் பிரசாதங்களும், சந்தனக்குழம்புப் பிரசாதமும் 27—9—64 ஞாயிறு மாலை 7 மணிக்குச் சென்னை சமயப் பிரசார நிலைய மன்றத்தில் திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை B. A., B. L அவர்கள் தலைமையில் வைத்தீஸ்வரன் கோயில் 'தேவாரம் திருப்புகழ், பிள்ளைத்தமிழ்ப் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கும் உறுப்பினர்கட்கும் வழங்கப்பெற்றன. தர்மபுரம் திரு. P. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினார். ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

Printed & Published by K. Sundaresa Iyer. Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-10-64.